17.07.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**"குறுவை சாகுபடி: தேவையான அளவுக்கு இடுபொருள்கள் இருப்பில் உள்ளன'**

மதுரை மாவட்டத்தின் குறுவை சாகுபடிக்குத் தேவையான இடுபொருள்கள் தேவையான அளவுக்கு இருப்பில் உள்ளது என்று வேளாண் துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் கு.ரா.சாரநாத் பாபு வெளியிட்டுள்ள செய்தி:

மதுரை மாவட்டத்தில் நடப்பு குறுவை சாகுபடி பருவத்தில் 6 ஆயிரம் ஹெக்டேர் நெல் சாகுபடி எதிர்பார்க்கப்படுகிறது. இது இருபோக சாகுபடி பகுதிகளான மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, வாடிப்பட்டி, அலங்காநல்லூர் வட்டாரங்களை உள்ளடக்கியது.

குறுவை சாகுபடி பணிகளைத் தொடங்கத் தயாராக இருக்கும் விவசாயிகள், குறுகிய கால நெல் ரகங்களான ஏடிடி 36, ஏடிடி 37, ஏடிடி 45, ஏடிடி (ஆர்)-48, எம்டியு-5, கோ 51 ஆகியவற்றைத் தேர்வு செய்யலாம். திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம், தண்ணீரையும் சாகுபடிக்கான செலவையும் மிச்சப்படுத்தலாம்.

நெல் இயக்கம் திட்டத்தில், இயந்திர நடவு செய்யும் விவசாயிகளுக்கு, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.3000 மானியம் வழங்கப்படும். சான்று பெற்ற விதை நெல், கிலோ ஒன்றுக்கு ரூ.10 மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்களது ஆதார் எண்களை வேளாண்மை விரிவாக்க

மையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

**22-இல் வேளாண் பயிற்சி முகாம்**

அங்கக வேளாண்மை, இயற்கை வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் சென்னையில் புதன்கிழமை (ஜூலை 22) நடைபெறவுள்ளது.

சென்னை, அண்ணா நகரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தகவல், பயிற்சி மையத்தில் அன்றைய தினம் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை இந்த முகாம் நடைபெறும். இதில் இயற்கை முறையில் உரம், பூச்சிக்கொல்லி, செடியின் உற்பத்தித் திறன் மேம்பாடு, மண்வளப் பாதுகாப்பு, நஞ்சில்லா வேளாண்மை போன்றவை குறித்து விளக்கம் அளிக்கப்படும். மேலும் வீட்டுத் தோட்டம், மாடித் தோட்டம், தொட்டிச் செடி பராமரித்தல், புறநகர் காய்கறிகள், தானியங்கள் உற்பத்தியில் அங்கக வேளாண் நுட்பங்கள் ஆகியவை குறித்து தகவல்கள் வழங்கப்படும். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் 044- 2626 3484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம். இதுகுறித்து மேலும் தகவல் பெற, பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தகவல், பயிற்சி மையம், எண் யு-30, 10-ஆவது தெரு, அண்ணா நகர், சென்னை- 600 040 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**மண் இல்லாமல் பசுந்தீவன உற்பத்தி**



மண் இல்லாமல் பயிர் வளருமா என்று நம்மில் பலரும் கேள்வி எழுப்புவர். ஆனால் மண் இல்லாமல் பயிர் வளரும் என்பதை அண்மைக்கால அறிவியல் நிரூபித்து வருகிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் மக்கள் தொகைப் பெருக்கம், பெருகி வரும் தொழிற்சாலைகள் ஆகியவற்றால் இன்று விளை நிலத்தின் பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. இது மட்டுமின்றி மழை அளவு குறைந்து வருவது, வேளாண் இடுபொருள்களின் விலையேற்றம், கூலிக்கு ஆள்கள் கிடைக்காதது, அதிக கூலி ஆகிய காரணங்களால் இன்றைய சூழ்நிலையில் விவசாயிகளும், கால்நடை வளர்ப்போரும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் கால்நடைகளுக்கு சத்தான பசுந்தீவனம் கிடைப்பதில்லை.

இதுகுறித்து காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் உதவிப் பேராசிரியர் (உழவியல்) பெ. முருகன் கூறியது: மண் இல்லாமல் பசுந்தீவனம் உற்பத்தி முறை விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் நல்ல திருப்பத்தை ஏற்படுத்தும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனங்களுக்கு ஹைட்ரோபோனிக் பசுந்தீவனம் என

அழைக்கப்படுகிறது. இந்த முறையில் 7 முதல் 10 நாள்களில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய முடியும். மேலும் குறைந்த எண்ணிக்கையிலான வேலையாள்கள், குறைந்த நீரில் ஆண்டு முழுவதும் பசுந்தீவனத்தை தடையின்றி உற்பத்தி செய்யமுடியும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனமானது, ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியான சீரான தரம், சுவை, சத்துக்கள் நிறைந்து காணப்படும். கல், மண், தூசி, பூச்சி மருந்துகள் ஆகியவை இல்லாமல் இருக்கும். 300 சதுர அடி பரப்பளவில் 800 முதல் 1000 கிலோ பசுந்தீவனம் உற்பத்தி செய்ய முடியும்.

பயன்படுத்தும் விதைகள்: நன்றாகக் காய்ந்த மக்காச்சோளம், சோளம், கம்பு, கோதுமை, பார்லி, ஓட்ஸ், கேழ்வரகு, காராமணி ஆகிய பயிர் விதைகளாக இருக்க வேண்டும். நன்றாக முளைப்புத் திறன் உள்ள விதைகளாகவும் இருக்க வேண்டும். உற்பத்தி முறை: 20-க்கு 15 அடி அளவுள்ள எளிமையான பசுமையான நிழல் வலை குடில் (பசுமைக்குடில்) அமைத்துக் கொள்ளலாம். இந்த குடிலில் மரம், இரும்பு தகடால் ஆன சாரம் வைத்து ரேக் அமைத்துக் கொள்ள வேண்டும். நிழல்வலை குடிலின் வெப்பநிலை 24 முதல் 27 டிகிரி செல்சியல், ஈரப்பதம் 80 முதல் 90 சதவீதம் இருக்குமாறு அமைத்துக் கொள்ள வேண்டும். முளை கட்டிய விதைகளை பிளாஸ்டிக் தட்டுகளில் பரப்பி, ரேக்கில் அடுக்கி வைத்து விடலாம். தினமும் ஐந்தாறு முறை பூவாளி கொண்டோ அல்லது சிறிய நுண் நீர் தெளிப்பான் கொண்டோ, நீர் தெளிக்க வேண்டும்.

8 நாள்களில் 15 முதல் 20 செ.மீ. அளவுக்கு பசுந்தீவனம் வளர்ந்து விடும். இந்த பசுந்தீவன புற்களை வேரோடு எடுத்து கால்நடைகளுக்கு கொடுக்கலாம். 300 சதுர அடிப் பரப்பளவில், 500 முதல் 600 கிலோ பசுந்தீவனம் தினமும் உற்பத்தி செய்யலாம். ஒரு கிலோ மக்காச்சோளத்துக்கு 6 முதல் 7 கிலோ பசுந்தீவனம் உற்பத்தி செய்யலாம்.

பயன்கள்: ஒரு கிலோ பசுந்தீவனம் உற்பத்தி செய்ய 1 முதல் 2 லிட்டர் நீர் போதுமானது. இதே அளவு பசுந்தீவனத்தை நிலத்தில் பயிரிட்டால் 60

முதல் 70 லிட்டர் நீர் தேவைப்படும். குறைந்த காலத்தில் அதாவது 7 முதல் 8 நாள்களில் அறுவடை செய்து விடலாம். கடும் வறட்சி காலங்களிலும் எளிமையாக பசுந்தீவனத்தை உற்பத்தி செய்ய முடியும். ஹைட்ரோபோனிக் பசுந்தீவனத்தில் அதிக புரதச் சத்துக்கள் உள்ளன. மிகவும் சுவையாக இருப்பதால், கால்நடைகளுக்கு கொடுக்கும் அடர்தீவனத்தின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம். இதன் மூலம் கறவை மாடுகள் 8 சதவீதம் முதல் 10 சதவீதம் பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். பாலின் தரமும் உயர்ந்து காணப்படும்.

ஹைட்ரோபோனிக் பசுந்தீவனத்தில் உள்ள சத்துக்களின் அளவு: ஈரப்பதம் - 80 முதல் 85 சதவீதம், புரதச் சத்து - 13 முதல் 14 சதவீதம், நார்ச்சத்து - 7 முதல் 9 சதவீதம், கொழுப்புச்சத்து - 3 முதல் 4 சதவீதம், நைட்ரஜன் அல்லாத சத்துக்கள் - 70 முதல் 75 சதவீதம், கால்சியம் - 0.3 முதல் 0.4 சதவீதம், பாஸ்பரஸ் - 0.3 முதல் 0.4 சதவீதம், செரிமான தன்மை 80 சதவீதம். எனவே அதிக அளவில் கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகள், குறைந்த மழை அளவு, வறட்சியான காலங்களில் மட்டுமின்றி ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் கிடைக்க ஹைட்ரோபோனிக் பசுந்தீவனத்தை வளர்த்து கால்நடைகளுக்கு சத்தான பசுந்தீவனத்தை கொடுத்த பண்ணை வருமானத்தை, பெருக்கி, பசுந்தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம். மேலும் விவரங்களுக்கு காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை 044 - 2745 2371 என்ற தொலைபேசி எண்ணிலோ, 98844 02613 என்ற செல்லிடப்பேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பயனடையலாம் என்றார் உதவி பேராசிரியர் பெ. முருகன்.

**மருந்து கூர்க்கன் - மகத்தான லாபம்!**



மூலிகை பயிரை வளர்த்தால் அதிக லாபம் ஈட்டலாம். குறுகிய கால மருந்துப் பயிர்களில் மருந்து கூர்க்கன் அல்லது கூர்க்கன் கிழங்கு (கோலியஸ்) பயிரிடப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் அதிகம் பயிரிடப்பட்ட இவற்றை, வேலூர் மாவட்ட விவசாயிகளும் பயிரிட்டு வருகின்றனர்.

பயிரின் சிறப்பு, பயிரிடுவது எப்படி?

இந்த மருந்து கூர்க்கனின் வேர்க்கிழங்குகள் மருந்து பொருள்களில் அதிகம் பயன்படுகின்றன. வேர்கள் கேரட்டை போல் பருமனாகவும், 30 செ.மீ. வரை நீளமாகவும் இருக்கும். வேர்கள் இளம் மஞ்சள் நிறத்துடனும், வாசனைத் தன்மையுடனும் இருக்கும். இவற்றில் ரத்த அழுத்தத்தைக் குறைக்கப் பயன்படும் போர்ஸ்கோலின் எனும் மூலப்பொருள் உள்ளது. இது கிளாகோமா எனும் கண்கோளாறு நோய்க்கும் மருந்தாக பயன்படுகிறது. மருந்து கூர்க்கனில் மங்கானிபெரு, கார்மாய் எனும் இரு ரகங்கள் இருக்கின்றன. மங்கானிபெரு கர்நாடக மாநிலம் பெல்காம் பகுதிகளில் அதிகம் பயிரிடப்படுகிறது. இதன் கிழங்குகள் பருமனாகவும், 30 செ.மீ வரை நீளமாகவும் இருக்கும். சேலம் மாவட்டத்தில் பயிரிடப்படுவதும்

மங்காணிபெரு ரகம் தான். மருந்து கூர்க்கனை செம்மண் அல்லது மணல் செம்மண் அல்லது சரளை வகை மண் உள்ள இடங்களில் சாகுபடி செய்யலாம். வேரின் வளர்ச்சிக்கு மண்ணின் தன்மை கடினமாக இருக்கக் கூடாது. வடிகால் வசதி உடைய மணற்பாங்கான மண் வகைகள் மிகவும் ஏற்றவை.

நீர்த் தேங்கும் மண் வகைகள் இதன் சாகுபடிக்கு ஏற்றதல்ல. ஒரளவு மழையளவு ஆண்டு முழுவதும் 70 செ.மீ. உள்ள சமவெளிப் பகுதிகள் மருந்து கூர்க்கன் சாகுபடிக்கு ஏற்றவை. தாழ்வான மலைச்சரிவுகளிலும் நன்றாக வளரும். தமிழ்நாட்டில் நீர்ப்பாசன வசதியுடன் இதை சாகுபடி செய்யலாம்.

நுனித்தண்டுகள் மூலம் கிழங்குகளை பயிர்பெருக்கம் செய்யலாம். மூன்று அல்லது நான்கு கணுக்களை உடைய 10 செ.மீ. நீளமுள்ள நுனிதண்டங்களை மட்டுமே நடவுக்கு பயன்படுத்த வேண்டும்.

நிலத்தை உழுது ஹெக்டேருக்கு 15 டன் தொழுஎரு இட்டு மண்ணை பயன்படுத்த வேண்டும். பிறகு 60 செ.மீ. இடைவெளியில் பார்களைப் பிடிக்க வேண்டும். பயிர்களின் பக்கவாட்டில் தண்டுகளை ஜுன்-ஜுலை அல்லது செப்டம்பர் -அக்டோபர் நடவு செய்ய வேண்டும். 60 செ.மீ. இடைவெளியில் அமைக்கப்பட்ட பார்களில் 45 செ.மீ. இடைவெளியில் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். ஒரு ஹெக்டேரில் நடவு செய்ய 37,030 செடிகள் தேவைப்படும். சற்றே வளம் குறைந்த நிலங்களில் செடிகளை 30 செ.மீ. இடைவெளியில் நடவு செய்யலாம். இந்த முறையில் ஹெக்டேருக்கு 55,000 செடிகள் நடுவதற்கு தேவைப்படும்.

ஒரு ஹெக்டேருக்கு 30 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து, 50 கிலோ சாம்பல் சத்து உரங்கள் ஆகியவற்றை செடிகள் நட்ட 30 ஆவது நாளிலும் பிறகு 45-ஆவது நாளிலும் சமமாகப் பிரித்து இட வேண்டும். நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறையாக உள்ள நிலங்களுக்கு ஹெக்டேருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் நுண்ணூட்டச் சத்து

உரத்தை அடியுரமாக இடுவது அவசியம். செடிகளை நட்ட முதல் மாதத்தில் வாரம் ஒரு முறையும், பிறகு பத்து நாள்கள் இடைவெளியிலும் நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். கிழங்குகளை அறுவடை செய்வதற்கு 10 நாள்கள் இருக்கும் போது, கடைசி பாசனத்தை நிறுத்தி விடவேண்டும். செடிகளை நட்ட ஆறு முதல் ஏழு மாதங்களில் கிழங்குகள் அறுவடைக்கு தயாராகின்றன. இந்தத் தருணத்தில் செடிகளை தாழ் அறுத்து மண்ணில் போதிய அளவு ஈரம் இருக்குமாறு மண்ணைத் தோண்டி, கிழங்குகளைத் சேதமின்றி எடுக்க வேண்டும். இதற்கு உழவு கலப்பையைக் கொண்டு மேலாக உழுது கிழங்குகளைச் சேதமின்றி எடுக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 15-20 டன் பச்சை வேர்கள் அல்லது 2000-2200 கிலோ உலர்ந்த வேர்கள் மகசூலாக கிடைக்கும். பச்சை கிழங்குகளை நீளவாக்காகவும், குறுக்காகவும் சிறிய துண்டுகளாக கத்தி கொண்டு வெட்டி பிறகு வெயிலில் சீராக உலர்த்த வேண்டும்.

2011-ஆம் ஆண்டு முதலே நெமிலி ஒன்றியத்தில் உள்ள பெரப்பேரி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பழனி மருந்து கூர்க்கனை பயிரிட்டுவருகிறார்.

இதுகுறித்து பழனியிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது: மூன்றரை ஏக்கரில் பயிரிடுவதைத் தொடங்கினேன். தற்போது ஏக்கருக்கு 10 டன் மகசூல் கிடைக்கிறது. டன்னுக்கு ரூ12 ஆயிரம் விலை கிடைக்கிறது. கிழங்குகள், உரங்களை கிழங்குகளை, அவற்றைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனத்தாரே அளிக்கின்றனர் என்றார்.

**இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஜூலை 17) நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் விவசாயம் தொடர்புடைய அனைத்துத் துறை அலுவலர்கள்

பங்கேற்கின்றனர். விவசாயம் தொடர்புடைய தனிநபர் பிரச்னையாக இருப்பின் கோரிக்கைகளை மனுக்களாக ஆட்சியரிடம் நேரடியாக வழங்கலாம். பொதுப் பிரச்னையாக இருப்பின் கோரிக்கையைத் தெரிவிக்கலாம்.

**ரெகுநாதபுரத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்: எம்.பி. திறப்பு**

ராமநாதபுரம் அருகே ரெகுநாதபுரத்தில் ரூ. 28 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டடத்தை, மக்களவை உறுப்பினர் அ. அன்வர்ராஜா வியாழக்கிழமை திறந்து வைத்தார். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் கடந்த 18 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. தற்போது, இதற்கான புதிய கட்டடம் 1,156 சதுர அடியில் ரூ. 28 லட்சம் மதிப்பில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இதற்கான திறப்பு விழாவும், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 50 லட்சம் வரை கடன் வழங்கும் விழாவும் நடைபெற்றது. விழாவுக்கு, ராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைவர் பி. ஜெயஜோதி தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மு. சுந்தரபாண்டியன், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் எஸ். செந்தமிழ் செல்வி, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ஆரோக்கிய சுகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு வங்கியின் பொதுமேலாளர் எஸ். பிரான்சிஸ் வரவேற்றார்.

இந்த புதிய கட்டடத்தில், கிராமப் புறத்திலுள்ள மக்கள் தங்களது நகைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு, பாதுகாப்பு பெட்டக வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியின்போது, ரெகுநாதபுரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு மொத்தமாக ரூ. 50 லட்சம்

கடனாக நிதியுதவியும் வழங்கப்பட்டது. விழாவில், ரெகுநாதபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கச் செயலர் ஜி. ரமேஷ்குமார், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் ராஜேந்திரன் உள்பட உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

**பயிர் காப்பீடு வழங்குவதில் ரூ.20 லட்சம் முறைகேடு:வெங்கிட்டன்குறிச்சி கூட்டுறவு கடன் சங்கத்தில் அதிகாரிகள் ஆய்வு**

பரமக்குடி அருகே உள்ள வெங்கிட்டன்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், பயிர் காப்பீடு வழங்குவதில் ரூ. 20 லட்சத்துக்கும் மேல் முறைகேடு நடந்துள்ளதாக வந்த புகாரைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் உத்தரவின்பேரில், அதிகாரிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர். ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள், கடந்த 2013-14 ஆம் ஆண்டு பதிவு செய்திருந்த நெல் பயிர் காப்பீட்டுத் தொகை, இந்த ஆண்டு மாவட்டம் முழுவதும் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் முறைகேடுகளை தவிர்க்கும் வகையில், மாவட்ட ஆட்சியர் ஒவ்வொரு சங்கத்திலும் கடன் பெறும் விவசாயிகள், கடன் பெறா விவசாயிகள் பட்டியலை பொதுமக்களின் பார்வைக்கு வைக்க உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவின்படி, வெங்கிட்டன்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன்பெற்ற விவசாயிகளின் பட்டியல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவில்லை எனவும், பல்வேறு போலி நபர்கள், நிலம் இல்லாதவர்களுக்கு போலி நிலவிஸ்தீரணம், போலி கடன் தொகைகள், ஒரே குடும்பத்தில் பலருக்கு கடன், நகைக்கடனில் முறைகேடு என இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் ரூ. 20 லட்சத்துக்கும்

மேல் முறைகேடு நடந்துள்ளதாக, வே.முத்துச்செல்லபுரம் கிராமத்தைச் அருளாந்து மகன் சேகர் என்பவர் மாவட்ட ஆட்சியருக்கு புகார் அளித்துள்ளார்.

புகாரின்பேரில், அச்சங்கத்தில் பயிர் காப்பீட்டுத் தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் குறித்து ஆய்வு செய்யுமாறு, வேளாண்மை உதவி இயக்குநர் ச. கண்ணையாவுக்கு ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில், வெங்கிட்டன்குறிச்சு கூட்டுறவு கடன் சங்கத்தில் ச. கண்ணையா தலைமையிலான அதிகாரிகள், கடந்த ஒரு வாரமாக முறைகேடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

**நுண்ணீர் பாசனத் திட்ட சாகுபடி நிலங்கள்: ஆட்சியர் ஆய்வு**

பெரியகுளம் வட்டாரத்தில் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் பயிர் சாகுபடி நடைபெறும் விவசாய நிலங்களை மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் வியாழக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது வடபுதுப்பட்டி, மதுராபுரி ஆகிய பகுதிகளில் இத் திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ள திசு வாழைகளை ஆட்சியர் பார்வையிட்டார். பெரியகுளத்தில் கோகோ சாகுபடி பரப்பளவு விரிவாக்கம், ஏ.புதுக்கோட்டையில் மானாவாரி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உரக் கூடம், பெரியகுளம் தோட்டக் கலை பண்ணையில் பசுமைக் குடில் நாற்று வளர்ப்பு முறை ஆகியவற்றை ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குநர் சின்னராஜ், உதவி இயக்குநர் ராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

சிறப்பு வாழ்வாதார திட்டப் பணிகள்: பெரியகுளத்தில் மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மாவட்ட மகளிர் திட்டம் மூலம் ஏழை

மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு புதிய சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியினை ஆட்சியர் தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் உஷாதேவி, உதவித் திட்ட அலுவலர்கள் முருகேசன், மோகன்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஈரோடு மாட்டுச் சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரிப்பு**

ஈரோடு மாட்டுச் சந்தைக்கு மாடுகள் வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் வாரந்தோறும் புதன், வியாழக்கிழமைகளில் இந்தச் சந்தை இயங்கி வருகிறது. புதன்கிழமை அடி மாடுகளும், வியாழக்கிழமை நல்ல நிலையில் இருக்கும் பசு

களும் விற்பனை செய்யப்படுவது வழக்கம்.

இச்சந்தையில் பசுக்களை விற்பனை செய்ய திருப்பூர், தேனி, திண்டுக்கல், திருச்சி, நாமக்கல், சேலம், தருமபுரி, திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் வந்து செல்கின்றனர். இந்தப் பசுக்களை கொள்முதல் செய்ய கர்நாடகம், ஆந்திரம், கோவா, கேரளம், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் வந்து செல்கின்றனர். பொதுவாக ஆந்திரம், கர்நாடக மாநிலங்களுக்கு அதிக எண்ணிக்கையில் பசுக்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த வாரம் 350 பசுக்கள், 250 எருமைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இவற்றில் 90 சதவீத பசுக்கள் விற்பனையாகிவிட்டதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர். கடந்த சில வாரங்களாக சந்தைக்கு வரும் பசுக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தீவனப் பற்றாக்குறை காரணமாக விவசாயிகள் மாடுகளை விற்பனை செய்து வருவதாக சந்தைக்கு வந்திருந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

**நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்**

நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி பெற்ற 30 பெண்களுக்கு சான்றிதழை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வியாழக்கிழமை வழங்கினார்.

தாந்தோணி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கூட்டரங்கில் மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலகு திட்டத்தின் கீழ் ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட 30 பேருக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களை ஆட்சியர் ச. ஜெயந்தி வழங்கிப் பேசியது:

ஏழை குடும்பங்களில் குடும்பத் தலைவராக மகளிர் இருந்து செயல்படும் குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் வகையில் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் ஊராட்சிப் பகுதிகளில் வசிக்கும் பெண்கள் தங்கள் பகுதியிலேயே சுயதொழில் தொடங்கும் வகையில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சியளிக்கப்படுகிறது. ஒரு தொழில் தொடங்குவதற்கு முன் அதன் செயல்பாடுகள் குறித்து முழு அளவில் தெரிந்து கொண்டால் தான் அதில் முழு வெற்றியைப் பெற முடியும் என்பதால் இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சி காலத்தில் பயிற்சி பெறுபவர்கள் பயிற்சியாளர்கள் அளிக்கும் தகவல்களை நன்கு உள்வாங்கிக்கொள்ள வேண்டும். மேலும் தங்களுக்கு எழும் சந்தேகங்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். தற்போது நாட்டுக்கோழி வளர்ப்புக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. அது மட்டுமின்றி இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் இதை ஒரு இணைத்தொழிலாகவும் பராமரித்து வரலாம். இதற்காக தனியாக இடங்கள் தேடுவது மற்றும் காலம் ஒதுக்கீடு செய்வது என்பது தேவையில்லை. நாம் அன்றாட பணியோடு சேர்த்து நாட்டுக்கோழி வளர்க்கும் போது அவை பொருளாதாரத்துக்கு உறுதுணையாக இருக்கும். எனவே தற்போது பயிற்சி பெற்ற 30 நபர்கள் மட்டுமின்றி மாவட்டத்தில் தேவையான தகுதி உள்ளவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து

பயன் பெற வேண்டும் என்றார். இதில் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் ரமேஷ், கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் அகிலா, கரூர் வட்டாட்சியர் ராமசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விளைநிலத்தை பாதிக்கும் இறால் பண்ணைகளை தடுக்க வலியுறுத்தல்**

வேதாரண்யம் பகுதியில் விளைநிலங்களுக்கு நடுவே உவர் நீர் இறால் பண்ணைகள் செயல்படுவதைத் தடுக்க வேண்டும் என ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாகை மாவட்டம், வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியக்குழுக் கூட்டம் அதன் தலைவர் சுசீலாதேவி சரவணன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜரெத்தினம், சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உறுப்பினர்கள் விவாதம்:

இளங்கோவன்: செண்பகராயநல்லூர் கால்நடைச் சந்தை பகுதியில் உள்ள பள்ளிக்கு தடுப்புச் சுவர் ஏற்படுத்த வேண்டும்.

சந்திரசேகரன்: தென்னடார் மேற்கு பகுதியில் நெல் விளையும் நிலத்தின் நடுவே உள்ள உப்புத் தண்ணீர் இறால் பண்ணையால் நிலத்தடி நீர்வளம் பாதித்து, சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. முருகையன்: கரியாப்பட்டினம் கடைவீதியில் பொது கழிப்பறை வசதி செய்ய வேண்டும்.

அசோக்குமார்: நாகை செல்லும் மாற்றுப் பாதையில் போக்குவரத்தை முறைப்படுத்த வேண்டும். இதேபோன்று, சின்ன.குமார், இளங்கோவன், பாலசுந்தரம் மற்றும் துணைத் தலைவர் ஜெயபால் உள்ளிட்டோர் தங்களது தொகுதி பிரச்னைகள் குறித்து பேசினர்.

தலைவர் சுசீலாதேவி சரவணன்: குடிநீர், சாலைகள், மயானக் கூரைகள் அமைக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

கிராமங்களில் எஸ்ஸி பிரிவினருக்கான இந்திரா தொகுப்பு வீடுகளை கட்ட பொருளாதார பிரச்னையால், பயனாளிகள் முன்வர தயங்குகிறார்கள். வீடுகள் மற்றும் கழிப்பறை கட்டும் திட்டத்தை ஒன்றியக் குழு உறுப்பினர்களே ஏழைகளுக்கு கட்டிக் கொடுக்க முன்வர வேண்டும் என்றார்.

**கால்நடை வளர்ப்புக்கு அரசு மானியம்**

கால்நடை வளர்ப்பை லாபகரமாக நடத்த அரசு மானியத்துடன் கூடிய மாநில தீவன பயிர் அபிவிருத்தி திட்டத்தை பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து புதன்கிழமை அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கால்நடைகளின் வளர்ச்சி மற்றும் உற்பத்தி திறனுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் வழங்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும். கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவன உற்பத்தி மிகக் குறைவாகவே உள்ளது. எனவே, தீவன பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், கால்நடை வளர்ப்போர் தங்களுக்குத் தேவையான பசுந்தீவனத்தினை தாங்களே உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும் தமிழக அரசு கடந்த 4 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை அரசு மானியத்துடன் செயல்படுத்தி வருகிறது.

இதன்படி, 2015-16ஆம் நிதியாண்டில் இறவையில் தீவன சோளம், வேலிமசால் விதைகள் சாகுபடி, மானாவரியில் தீவன சோளம், தட்டை பயிர் சாகுபடிக்கு விதைகள் வழங்கும் திட்டம், பல்லாண்டு தீவனப் பயிர்களுக்கு 75 சதவீத மானியத்தில் நீர்பாசன கருவிகள் வழங்கும் திட்டம், இலவசமாக தீவன மரவிதைக் கன்றுகள் வழங்கும் திட்டம், 100 சதவீத மானியத்தில் அசோலா தீவனம் உற்பத்தி உபகரணங்கள் வழங்கும் திட்டம், ஊறுகாய் புல் தயாரிப்பதற்குரிய 250 கிலோ கொள்ளளவு உடைய தீவன குழாய்கள் (சைலேஜ் பைப்ஸ்) வழங்கும் திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்படவுள்ளன.

மேற்கூறியத் திட்டங்களில் கால்நடை வளர்ப்போர் தங்களுக்கு உகந்த திட்டங்களை குறிப்பிட்டு அருகாமையில் உள்ள கால்நடை உதவி மருத்துவரிடம் விண்ணப்பிக்கலாம். ஆதிதிராவிட மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஏற்கனவே பயனடைந்த பயனாள் இத்திட்டங்களின் கீழ் பயன்பெற இயலாது. மேலும் மத்திய அரசு நிதியுடன் குறைந்தபட்சம் 4 கால்நடைகள் வைத்திருந்து 0.5 ஏக்கருக்குக் குறையாமல் தீவனப்பயிர் வளர்த்து வரும் கால்நடை வளர்ப்போருக்கு மானிய விலையில் புல் அறுக்கும் கருவியும் வழங்கப்பட உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கால்நடை மருத்துவமனை திறப்பு**

திண்டிவனத்தை அடுத்த தென்பசியார் ஊராட்சியில் தமிழ்நாடு கால்நடைத் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனையின் கட்டடத் திறப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது.

தமிழக முதல்வர் சென்னையிலிருந்து காணொலி மூலம் ரூ.20 லட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தை திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து திண்டிவனம் சட்டப்பேரவை உறுப்பினர் த.ஹரிதாஸ் கட்டட வளாகத்தில் குத்துவிளக்கு ஏற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இம்மருத்துவமனை மூலம் தென்பசியார்,கீழ்எடையாளம்,தென்களவாய், சிங்கனூர்,கருணாவூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கால்நடை விவசாயிகள் பயனடைவர். இந்நிகழ்ச்சியில் தென்பசியார் ஊராட்சி மன்றத் தலைவர் கதிர்வேல்,துணைத் தலைவர் ஏழுமலை,கவுன்சிலர் ஜனார்த்தனன்,திண்டிவனம் பகுதி கால்நடை உதவி இயக்குநர் மகேந்திரன்,மருத்துவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**உணவுப் பாதுகாப்பு  விழிப்புணர்வு கருத்தரங்கம்**

திண்டிவனத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு திண்டிவனம் மளிகை வியாபாரிகள் சங்கம் மற்றும் அனைத்து வர்த்தக சங்கத் தலைவர் கல்கண்டு டி.சுந்தரம் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்ட நியமன அலுவலர் உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையின் மருத்துவர் ஜி.வரலட்சுமி உணவுப் பாதுகாப்பு சட்ட விளக்க உரை வழங்கினார். திண்டிவனம் நகராட்சியின் உணவுப் பாதுகாப்பு அலுவலர் (பொறுப்பு) கு.மோகன், உணவு பொட்டல பொருள் விபரச்சீட்டு விதிகள் குறித்தும், வானூர் வட்டார உணவுப் பாதுகாப்பு அலுவலர் ப.சந்திரசேகர் உணவுப் பொருளில் கலந்துள்ள செயற்கை சாயங்கள் மற்றும் அதன் பாதிப்புகள் குறித்தும், கலப்படங்களும் அதன் பாதிப்புகள் குறித்தும் கோலியனூர் வட்டார உணவுப் பாதுகாப்பு அலுவலர் டி.குமரேசன் பேசினார். உணவியல் சுகாதாரம் குறித்து செஞ்சி வட்டார உணவுப் பாதுகாப்பு அலுவலர் எஸ்.கதிரவன் விளக்கிக் கூறினார். நிகழ்ச்சியில் திண்டிவனம் சங்கச் செயலர் ரஹ்மான்பாஷா,பொருளாளர் எஸ்.வேல்முருகன் மற்றும் திண்டிவனத்தில் உள்ள ஹோட்டல்,மளிகை வியாபாரிகள்,பேக்கரி,குளர்பானம் மற்றும் அரிசி உற்பத்தியாளர்கள்,எண்ணெய் வியாபாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வேளாண் மாணவர்களுக்குப் பயிற்சி**

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் வேளாண்புல இறுதி ஆண்டு மாணவர்கள் கிராமப் புறங்களில் தங்கி பயிற்சி பெறுவது வழக்கமாகும். அதன்படி, கிராமப்புறத்தில் பயிற்சி பெறுவதற்கான தொடக்க விழா விருத்தாசலத்தை அடுத்த

மணவாளநல்லூரில் புதன்கிழமை நடைபெற்றது. அப்போது, விவசாய புதிய தொழில்நுட்பம் குறித்த துண்டறிக்கைகளை வழங்கினர்.

நிகழ்ச்சியில், மாணவர் குழு பிரதிநிதி பாலு வரவேற்றார். ஊராட்சித் தலைவர் ஆதிபராசக்தி ஹரிகிருஷ்ணன் தலைமை வகித்தார். உதவிப் பேராசிரியர் காளிதாசன் முன்னிலை வகித்தார். இதில் ஊராட்சி துணைத் தலைவர் சபரிநாதன், வேளாண் புல மாணவர்கள் மற்றும் விவசாயிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**உலக பாம்புகள் தினம்: புகைப்படக் கண்காட்சி தொடக்கம்**

திருநெல்வேலி மாவட்ட அருங்காட்சியகத்தில் உலக பாம்புகள் தின புகைப்பட கண்காட்சி வியாழக்கிழமை தொடங்கியது. கண்காட்சி இம்மாதம் 23ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

உலக பாம்புகள் தினமாக ஜூலை 16 ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி, பாளையங்கோட்டையில் உள்ள திருநெல்வேலி மாவட்ட அருங்காட்சியகத்தில் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது. காப்பாட்சியர் (பொ) சிவ.சத்தியவள்ளி வரவேற்றார். உதவி வனப் பாதுகாவலர் சுமேஷ் சோமன் கண்காட்சியைத் திறந்துவைத்தார். பேராசிரியர் ஜாஹீர் உசேன் சிறப்புரையாற்றினார்.

கண்காட்சியின்போது பொதுமக்களிடம் கூறியதாவது: பாம்புகள் மற்றும் மனிதர்களுக்கான தொடர்பு பழங்காலத்திலிருந்தே இருந்து வருகிறது. பாம்புகளுக்கு ஜீரண சக்தி மிகவும் அதிகம். ஆட்டுக்குட்டி போன்றவற்றை விழுங்கும்போது அவற்றின் அனைத்து பாகங்களும் ஜீரணமாகிவிடுகின்றன. முடி, கொம்புகள் போன்றவை மட்டுமே ஜீரணிக்கப்படாமல் கழிவோடு வெளியேறுகின்றன. பாம்புகளுக்கு

இமைகள், காதுகள் கிடையாது. நாக்கை வைத்துதான் இரைகளைத் தேடும்.

பாம்புகள் மீதான மூடநம்பிக்கைகள் அதிகமாக உள்ளன. அவை தவிர்க்கப்பட வேண்டும். 1972ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டப்படி பாம்புகளைக் கடத்துவதும், கொல்வதும் தண்டனைக் குரியதாக்கப்பட்டுள்ளது. பாம்புகள் குறித்த விழிப்புணர்வு அதிகரிக்கப்பட வேண்டும். நாகப்பாம்பு, கட்டுவிரியன், கண்ணாடிவிரியன், சுருட்டைவிரியன் உள்ளிட்ட பாம்புகள் கடித்தால், கடிபட்டவர்களை உடனடியாக அரசு மருத்துவமனைகளில் சேர்க்கும்போது அங்கு தடுப்பூசிகள் அளித்து மனித உயிர்களைக் காக்கும் மருத்துவ வசதிகள் உள்ளன. மலைப்பகுதிகள், சமவெளிகளில் உள்ள பாம்புகளைவிட கடல் பாம்புகளுக்கே விஷம் மிகவும் அதிகம் என்றனர். கண்காட்சியில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். கண்காட்சி இம் மாதம் 23ஆம் தேதிவரை நடைபெறும். தினமும் காலை 9.30 முதல் மாலை 5 மணிவரை பொதுமக்கள் கண்காட்சியைப் பார்வையிடலாம்.

## 24இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஜூலை 24 ஆம் தேதி நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் தெரிவித்துள்ளார். இதுகுறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்டச் செய்திக் குறிப்பு: ஜூலை மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 24 ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு மாவட்ட ஆட்சியரக நாஞ்சில் கூட்டரங்கில் வைத்து நடைபெறுகிறது. இதில் விவசாயிகளிடமிருந்து ஜூன் மாத கோரிக்கை தினத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கான பதில்கள் வழங்கப்படும். மேலும், விவசாயம் தொடர்பான கோரிக்கைகளும் பெறப்படும். எனவே, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் திரளாக கலந்துகொள்ளலாம் என்றார் அவர்.

தினமலர்

# இன்றைய வேளாண் செய்திகள்

## அரசு மருத்துவமனையில் சூரிய ஒளியில் மின்சாரம்



திருப்பதி:அரசு மருத்துவமனையில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஆந்திர அரசு முடிவு செய்துள்ளது.ஆந்திர மாநிலம், குண்டூர், விஜயவாடா, காக்கிநாடா, விசாகபட்டினம், கர்னூல் மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளின் மேல்தளத்தில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்க அனுமதி அளிக்க வேண்டும் என 'நெட்காப்' என்கிற ஆந்திர புதுப்பிக்கத்தக்க எரி சக்தி நிறுவனம் மாநில அரசை கோரியது.இதற்கு, அரசு அனுமதியளித்துள்ள நிலையில் இதற்கான பணிகள் விரைவாக துவங்க உள்ளன. இதற்கு தேவைப்படும் நிதியில் 15 சதவீதம் மத்திய அரசு 15 சதவீதம் நெட்காப், மீதமுள்ள 70 சதவீதம் 'இரிடா'வும் அளிக்க முன்வந்துள்ளன.அரசு மருத்துவமனையின் மேல்தளம் விசாலமாகவும், உறுதியாகவும் இருப்பதால் ஒவ்வொரு மருத்துவமனையின் மீதும் அரை முதல் ஒரு மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் சூரிய ஒளி பேனல்கள் அமைக்க உள்ளனர். இங்கு

உற்பத்தியாகும் மின்சாரத்தை கொள்முதல் செய்ய ஒவ்வொரு மருத்துவமனையும் நெட்காப்புடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.ஒரு யூனிட் சூரிய ஒளி மின்சாரத்திற்கு 6 ரூபாய் முதல் 6.50 ரூபாய் வரை வசூலிக்க நெட்காப் முடிவு செய்துஉள்ளது. இந்த மின் கொள்முதல் விலை நிர்ணயம் 25 ஆண்டுகளுக்கு மாறாமல் இருக்கும். இந்த விலை தற்போது கொள்முதல் செய்யப்பட்டு வரும் மின்சாரத்தை காட்டிலும் மிகவும் குறைவு என்பதால் ஆந்திர அரசு இந்த திட்டத்திற்கு முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

**வாடல் நோய் பாதிப்பு மாற்றுக்கு தாவும் விவசாயிகள்**



திண்டுக்கல் :சிறுமலை வாழையை தாக்கிய வாடல் நோயை கட்டுப்படுத்த முடியாததால் விவசாயிகள் மாற்றுப் பயிருக்கு மாறி வருகின்றனர்.சிறுமலை வாழைப்பழம் சுவையும், மருத்துவ குணமும் கொண்டது. இதனால் தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களிலும் கிராக்கி உள்ளது. இந்தவாழை 40 ஆண்டுகளுக்கு முன் சிறுமலை பழையூர், புதுார், தென்மலை பகுதிகளில் 16 ஆயிரம் ஏக்கரில்

பயிரிடப்பட்டது. காட்டு விலங்குகள், நோய் தாக்குதலால் சாகுபடி பரப்பு தற்போது 700 ஏக்கராக குறைந்துள்ளது.சமீபத்தில் வாழையில் வாடல்நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது. இந்நோய் தாக்கிய வாழை மரங்கள் மஞ்சள் நிறமாக மாறி, சத்துக்கள் குறைந்துவிடும். இதனால் வாழைக்காய்கள் பெரிதாகும் முன்பே தார்கள் சாய்ந்துவிடும். இந்நோயை கட்டுப்படுத்த முடியாததால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்கள் காப்பி, மிளகு போன்ற மாற்று பயிர்களுக்கு மாறி வருகின்றனர்.விவசாயி உத்தமன் கூறியதாவது: 15 மாதங்களுக்கு பின்பே வாழை காய்ப்புக்கு வருகிறது. காய்கள் பெரிதாகும் சமயத்தில் வாடல்நோய் தாக்கி நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. ஏற்கனவே காட்டுமாடுகள், பன்றிகள், குரங்குகள் தொல்லை அதிகமாக உள்ளது. இதனால் வாழை விவசாயத்தை கைவிட வேண்டிய நிலை உள்ளது. சிறுமலை வாழையை காக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.தோட்டக்கலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், “வாடல் நோயை முழுமையாக தடுக்க ஆய்வு நடத்தி வருகிறோம்,” என்றார்.

**உலக வங்கி நிதி ரூ.3.75கோடி செலவில் பாலாறு பொருந்தலாறு அணை புதுப்பிப்பு**

பழநி, :பழநி பாலாறுபொருந்தலாறு அணையை உலகவங்கி நிதி ரூ.3.75 கோடி செலவில் புதுப்பிக்கும் பணி துவங்கியுள்ளது.திண்டுக்கல் மாவட்டம் பழநி பாலாறுபொருந்தலாறு அணை 1979ம் ஆண்டில் கட்டப்பட்டது. மொத்த உயரம் 65 அடி. இந்த அணையின் இடது, வலது பிரதான கால்வாய்கள் மூலம் 17 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. பழநி, பாலசமுத்திரம், பொருந்தல், புளியம்பட்டி, அ.கலையம்புத்தூர் கிராமங்களில் நெல், கரும்பு, மக்காசோளம், காய்கறிகள்

பயிரிடப்படுகின்றன. பழநிநகர் மற்றும் கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாக உள்ளது.35 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தடுப்புச் சுவரில் கற்கள் பெயர்ந்து தண்ணீர் கசிவு ஏற்படுகிறது. பல ஆண்டுகளான மதகு, ஷட்டர்களும் தேய்மானம் அடைந்துள்ளன. இதனால் பொதுப் பணித் துறையினர் உலகவங்கி நிதி ரூ.3.75கோடி செலவில் தற்போது அணையை புதுப்பிக்கும் பணிகளை துவங்கியுள்ளனர். முதற்கட்டமாக அணையின் நீர்ப்பிடிப்பு தடுப்புகள் மற்றும் மழைபெய்தால் தண்ணீர் வரும் கால்வாய் பகுதிகளில் வளர்ந்துள்ள முட்செடிகள், சேதமடைந்த பகுதிகளை மண் அள்ளும் இயந்திரம் மூலம் அகற்றி வருகின்றனர். அதை புதுப்பிக்கும் பணியை மேற்கொண்டு உள்ளனர்.பொதுப் பணித்துறையினர் கூறுகையில்,“ பழநி பாலாறுபொருந்தலாறு, குதிரையாறு அணைகளை உலகவங்கி ஆய்வுக்குழுவினர் கடந்த சிலமாதங்களுக்கு முன் ஆய்வு செய்து நிதி வழங்கினர். குதிரையாறு அணையில் ரூ.1கோடி செலவில் புதுப்பிக்கும் பணிநடக்கிறது. தொடர்ந்து பாலாறு பொருந்தலாறு அணைகளை பொதுப் பணித்துறை ஷட்டர், ஒர்க்ஷாப், எலக்ட்ரீசியன் என தனித்தனிபிரிவுகள் மூலம் புதுப்பிக்கும் பணிநடக்கிறது. இப்பணிகள் முடிய ஓர் ஆண்டு ஆகலாம்,” என்றனர்.

**கள்ளந்திரி கால்வாயில் வந்தது தண்ணீர்:விவசாய பணிகள் துவக்கம்**

அழகர்கோவில்:வைகை அணையில் இருந்து பேரணை முதல் கள்ளந்திரி வரை முதல் போக சாகுபடிக்கு திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று காலை 10.30 மணிக்கு கள்ளந்திரி வந்தது. பெண்கள் சூடம் ஏற்றி வரவேற்றனர். விவசாயிகள் விவசாய பணிகளை துவக்கினர்.

கள்ளந்திரி கால்வாய் மூலம் வாடிப்பட்டி, காஞ்சரம்பேட்டை,

சத்திரப்பட்டி, மஞ்சம்பட்டி, கள்ளந்திரி, கருப்பாயூரணி, ஆண்டார்கொட்டாரம், சக்கிமங்கலம், பூலாங்குளம் பகுதிகளில் 45 ஆயிரம் ஏக்கர் இருபோக சாகுபடி நிலங்களும், மேலூர் பகுதியில் 80 ஆயிரம் ஏக்கர் ஒருபோக சாகுபடி நிலங்களும் பயன்பெறுகின்றன.கடந்த ஆண்டு மழையின்றி வைகையில் இருந்து ஒருபோக

சாகுபடிக்கு செப்டம்பரில் தண்ணீர் திறக்கப்பட்டது.

இந்த ஆண்டும் மே வரை வைகையில் குறைந்த அளவே தண்ணீர் இருந்ததால் விவசாயிகள் மிகுந்த கவலையில் இருந்தனர். ஜூன் முதல் வாரத்தில் பெரியாறு மற்றும் வைகை அணை பகுதிகளில் நல்ல மழை பெய்தது. இதனால் இரு அணைகளிலும் நீர் வரத்து அதிகரித்து அணைகளின் நீர்மட்டம் உயர்ந்தன. ஜூன் இறுதியில் வைகையில் 47 அடி வரை தண்ணீர் இருந்தது.இரு அணைகளையும் சேர்த்து 4500 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்ததால், கள்ளந்திரி பகுதி முதல் போக சாகுபடிக்கு ஜூலை 5ல் தண்ணீர் திறக்கும்படி பொதுப்பணித் துறை அதிகாரிகளிடம் விவசாய சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர். ஜூலை 10ல் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்த அதிகாரிகள், நேற்று முன்தினம் வைகையில் இருந்து தண்ணீர் திறந்தனர்.

நேற்று காலை 10.30 மணிக்கு கள்ளந்திரி பகுதிக்கு தண்ணீர் வந்தது. கால்வாய் ஒட்டிய பகுதிகளில் வசிக்கும் பெண்கள் தட்டில் தேங்காய், பழம் வைத்து, சூடம் ஏற்றி வழிபட்டனர். 9வது பிரிவு வாய்க்காலில் பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் கார்த்திகேயன், உதவி பொறியாளர்கள் சாலமன்கிறிஸ்துதாஸ், சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில், விவசாய சங்கத்தினர் ஷட்டருக்கு மாலை அணிவித்து, சூடம் ஏற்றி வழிபட்டு தண்ணீர் திறந்து, மலர் தூவி வரவேற்றனர்.

கள்ளந்திரி பகுதி விவசாயிகள் வயல்களை உழுது சமன்படுத்த துவங்கி,

நாற்றங்கால் அமைத்து விதை தூவினர்.

கீழகள்ளந்திரி விவசாயி முத்து கூறியதாவது:கால்வாய் அருகில் ஒன்றரை ஏக்கர் நிலம் உள்ளது. விவசாயத்தை நம்பியே உள்ளோம். கடந்து ஆண்டு தண்ணீர் பற்றாக்குறையால் ஒருபோகம் மட்டுமே பயிரிட முடிந்தது. இந்த ஆண்டு ஜுலை முதல் வாரத்திலேயே தண்ணீர் வரும் என தெரிவித்தனர். இதனால் விதை நெல்லுடன் தயாராக இருந்தோம். தண்ணீர் வந்தது மகிழ்ச்சியாக உள்ளது. தற்போது விதை பாவினால் தான் இருபோகம் சாகுபடி செய்ய முடியும் என்பதால் உடனே பணிகளை துவக்கி விட்டோம், என்றார். வேளாண் துறை சார்பில் முதல்போக நெல் சாகுபடிக்கு தேவையான ஆடுதுறை 45 (ஏ.எஸ்.டி.), ஜெ.ஜி.எல்., பி.பி.டி., என்.ஆல்.ஆர்., 26 ஆகிய மானியமில்லா நெல் விதைகள் கிலோ தலா ரூ.26 மற்றும் ரூ.27 க்கு வேளாண் அலுவலகங்களில் கிடைக்கும். என்.எல்.ஆர்., கோ ஆர் 49., ஆகிய நெல் விதைகளின் விலை கிலோ ரூ.26 மற்றும் ரூ.27. இவற்றிற்கு ரூ.10 மானியம் உண்டு. கோ ஆர் 49 ரகம் இருப்பு இல்லை.

தயார் நிலையில் நெல் விதைகள்விதை நேர்த்தி முக்கியம்: நெல் விதையுடன் 'சூடோமோனாஸ்' விதை நேர்த்தி மருந்தினை கிலோவிற்கு 10 கிராம் வீதம் கலந்து விதைக்க வேண்டும். நடவு வயலில் ஏக்கருக்கு ஒரு கிலோ தொழு உரத்துடன் கலந்து நடவிற்கு முன் கடைசியாக துாவி நடவு செய்ய வேண்டும். இதனால் நடவின் துார் பகுதி முழுவதும் கோட்டை போல் மண்ணில் வேரூண்டும். இதன் மூலம் வேர் பகுதி மண்ணிற்கு பாதுகாப்பை உறுதி செய்யும். பயிரை தாக்கும் நோய் கிருமிகளையும் அண்ட விடாது. இதனால் நெல்லில் ஏற்படும் குலைநோய், இலைநோய், இலைப்புள்ளி உள்ளிட்ட நோய்கள் வராது.

நெல்லில் கூடுதல் மகசூல் கிடைக்கும் என வேளாண் துறை அறிவித்துள்ளது.

**பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

திருவள்ளூர்:நடப்பு நிதியாண்டில், 20 வகையான பயிர்களுக்கு, காப்பீடு செய்து பயன்பெறுமாறு, விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.சென்னையிலுள்ள, அக்ரிகல்ச்சர் இன்ஸ்யூரன்ஸ் நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்து உள்ளதாவது:திருவள்ளூர் மாவட்டத்தில், நடப்பு நிதிஆண்டில் நெல், கம்பு, சோளம், ராகி, துவரை, நிலக்கடலை, கரும்பு உள்ளிட்ட, 20 வகையான பயிர்களுக்கு, மத்திய, மாநில அரசுகள் மூலம், காப்பீடு செய்யப்பட உள்ளது. இத்திட்டம், தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ், செயல்படுத்தப்பட உள்ளது.கடன்பெறா விவசாயிகள், நெற் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு, 228 ரூபாயும், கடன் பெற்ற விவசாயிகள், 254 ரூபாயும் பிரீமியமாக செலுத்த வேண்டும். இவர்கள், வரும், 31ம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ளலாம். கம்பு, சோளம், கரும்பு உள்ளிட்ட மற்ற பயிர்களை விளைவித்துள்ள விவசாயிகள், செப்., 15ம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ளலாம்.இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற விரும்பும் விவசாயிகள், அருகில் உள்ள வேளாண் துறை அலுவலகம், கூட்டுறவு மற்றும் வர்த்தக வங்கிகளில் படிவங்களை பெறலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**ரூ.25 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்**

நாமக்கல்:நாமக்கல், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், 25 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில்

உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 1,800 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.அதில், டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,199, குறைந்த பட்சம், 3,637 ரூபாய், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,176, குறைந்த பட்சம், 3,784 ரூபாய்க்கு ஏலம் போனது. அதேபோல், சுரபி ரகம் அதிக பட்சம், 6,301, குறைந்த பட்சம், 5,860 ரூபாய்க்கு ஏலம் போனது.நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 1,800 மூட்டை பருத்தி, 25 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**தேங்காய் வரத்து அதிகரிப்பு விலை குறைவால் மகிழ்ச்சி**

ஈரோடு:வரத்து அதிகரிப்பால், தேங்காய் விற்பனை குறைந்து இருப்பதாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.ஈரோடு, நேதாஜி தினசரி மார்க்கெட்டுக்கு வெள்ளோடு, சிங்கம்பேட்டை, கொக்கராயன்பேட்டை மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் இருந்தும், தினமும், 10 டன் அளவுக்கு தேங்காய் வருகிறது. விளைச்சல் அதிகரிப்பால், வரத்து பன்மடங்காக தற்போது அதிகரித்துள்ளது.இதுகுறித்து, தேங்காய் வியாபாரிகள் கூறியதாவது:ரெகுலராக தினமும், 10 டன் அளவுக்கு, தேங்காய் வரத்தாகிறது. பெரிய சைஸ் காய், 11 அல்லது, 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆடி பண்டிகையின் போது, தேங்காய் பயன்பாடு அதிகரிக்கும். அப்போது கூடுதலாக, மூன்று முதல், நான்கு டன் வரை வரத்து அதிகரிக்கும். தற்போது வரத்து அதிகமாக உள்ளது. விளைச்சல் அதிகரித்ததே, இதற்கு காரணம்.எனினும் ஆடி மாதம் துவங்கியுள்ளதால்,

கோவில் விசேஷங்கள் அதிகளவில் நடைபெறும். எனவே தேங்காய் பயன்பாடு கணிசமான அளவு அதிகரிக்கும்.தற்போது வரத்தாகும் காய்களில் சிறிய அளவில் உள்ளவற்றை, 5 முதல், 6 தேங்காய் கொண்ட கூறு, 25 முதல், 30 ரூபாய்க்கு விற்கிறோம். கிராமப்பகுதிக்கு செல்லும் வியாபாரிகள், சிறிய காய்களை மொத்தமாக வாங்கி செல்கின்றனர். அங்கு, ஒன்று அல்லது இரண்டு ரூபாய் கூடுதல் விலை வைத்து விற்கின்றனர்.விலை குறைந்துள்ளதால், தேங்காய் வாங்க வருவோர் மகிழ்ச்சி அடைந்து, கூடுதலாக வாங்கி செல்கின்றனர்.இவ்வாறு, அவர் கூறினார்.

**தேங்காய் சுடும் அளிஞ்சி குச்சிகள் ஜோடியாக ரூ.10க்கு விற்பனை**

ஈரோடு:ஆடி பண்டிகையை முன்னிட்டு, விற்பனைக்கு வந்த அளிஞ்சி குச்சிகளை வாங்க, ஆள் இல்லாததால் வியாபாரிகள் தவித்தனர்.ஆடி மாத துவக்கத்தில், ஆடி பண்டிகை கொண்டாடப்படுகிறது. முக்கண் கொண்ட தேங்காய் கண்ணை திறந்து, அதில் வறுத்த எள், பச்சரிசி, பொட்டுக்கடலை, நாட்டு சர்க்கரை, தேங்காய் நீரை சிறிதளவு ஊற்றி மூட வேண்டும். தேங்காய் நாரை முழுமையாக அகற்ற வேண்டும்.அளிஞ்சி குச்சியால், தேங்காயை தூக்கி நெருப்பில் இட்டு சூடாக்க வேண்டும். மாலையில் விநாயகர் கோவிலுக்கு சென்று, தேங்காயை விநாயகரை வேண்டி கொண்டு உடைக்க வேண்டும் என்பது ஐதீகம்.அக்காலத்தில், இந்த நடைமுறையை பொதுமக்கள் பின்பற்றினர். தற்போது, இந்த கலாச்சாரம் குறைந்து வருகிறது. இதற்கிடையில் நேற்று, அளிஞ்சி குச்சிகள், ஈரோடு மார்க்கெட் பகுதிக்கு விற்பனைக்கு வந்தது.இவை ஜோடியாக, 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சேலம், நாமக்கல், திருச்சி, சத்தியமங்கலம், நம்பியூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படுகிறது. அளிஞ்சி மரத்தில் இருந்து, சிறு கிளைகள் உடைக்கப்பட்டு, ஆடி பண்டிகைக்காக கொண்டு

வரப்படுகிறது.

இதுகுறித்து சேலம், சீலநாயக்கன் பட்டியை சேர்ந்த மணி கூறியதாவது: நாகரிகம் மாறி வருவதால், சமீப காலமாகவே, அளிஞ்சி குச்சிகளை வாங்குவோர் எண்ணிக்கை குறைந்து வருகிறது. ஒரு நாள் மட்டுமே விற்க முடியும். அளிஞ்சி மரங்கள் பெரும்பாலும், அழிந்து வருகிறது.வறட்சியான பகுதியில் மட்டுமே, இவ்வகை மரங்களை காண முடியும். ஜோடி, 10 ரூபாய்க்கு விற்கிறோம். குறைந்த அளவில் தான் அளிஞ்சி குச்சிகளை கொண்டு வந்துள்ளோம். கொண்டு வந்த குச்சிகளை விற்று விடுவோம். மிக சிலர் மட்டுமே, குச்சிகளை விற்கின்றனர். இன்னும் சில ஆண்டுகளில், குச்சிகள் விற்பனை இல்லாமல் போய் விடும், என்றார்.

## கனி மார்க்கெட்டில் "ரம்ஜான்' பண்டிகை 2 நாளில் ரூ.1.60 கோடிக்கு விற்பனை

ஈரோடு:ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு, ஈரோடு, கனி மார்க்கெட்டில் திங்கள், செவ்வாய் ஆகிய இரண்டு நாளில், 1.60 கோடி ரூபாய் மதிப்பிலான ஜவுளி விற்பனையானது.நாளை (18ம் தேதி) ரம்ஜான் பண்டிகை கொண்டாடும் நிலையில், ஈரோடு, கனி மார்க்கெட்டில், கடந்த சில நாட்களாக, ஜவுளி விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக, கடந்த, திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய இரு நாட்களில் மட்டும், 1.60 கோடி ரூபாய்க்கு ரெடிமேடு மற்றும் உள்ளாடை விற்பனையானது.ஏழை மற்றும் நடுத்தர மக்களின் பட்ஜெட்டுக்கு ஏற்ற வகையில், குறைந்தபட்சம், 100 முதல், 500 ரூபாய் வரை, ரெடிமேடு ஆடைகள், லுங்கி மற்றும் உள்ளாடைகள் இங்கே விற்பனை செய்யப்படுகிறது. தினசரி சந்தையை காட்டிலும், வாரச்சந்தையில், உற்பத்தியாளர்களே நேரடியாக ராசிபுரம், திருச்செங்கோடு, திருப்பூர்,

நாமக்கல் மாவட்டம் உட்பட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்கள், இங்கு விற்பனை செய்வதால், குறைந்த விலையில் ஜவுளிகள் வாங்க மகாராஷ்டிரா, கேரளா, ஆந்திராவை சேர்ந்த வியாபாரிகள், பொதுமக்கள் அதிகளவில் வருகின்றனர். இந்த வாரம், ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு, வெளிமாநில வியாபாரிகள் வரத்து அதிகரித்தது.இதுகுறித்து, கனி மார்க்கெட் அனைத்து வாரச்சந்தை வியாபாரிகள் சங்க தலைவர் செல்வராஜ் கூறியதாவது:கனி மார்க்கெட்டில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு, கொல்கத்தாவில் இருந்து புதிய ரக ரெடிமேடு ஆடைகள் விற்பனைக்கு வந்துள்ளன. கடந்த வாரம் விற்பனை மந்தமாக இருந்த நிலையில், ரம்ஜான் பண்டிகை நெருங்குவதால், இந்த வாரச் சந்தையில் தினமும், 80 முதல், 90 லட்சம் ரூபாய் வரை, வியாபாரம் நடந்தது. குறிப்பாக, ரெடிமேடு, உள்ளாடைகள் விற்பனை நன்றாக இருந்தது.பண்டிகையை முன்னிட்டு வெளிமாநில வியாபாரிகளும், அதிகளவில் வந்திருந்தனர். கடந்தாண்டைக்காட்டிலும், இந்தாண்டு விற்பனை சிறப்பாக இருந்தது.ரம்ஜான் பண்டிகை முடிந்தாலும், ஆடி, 18 பண்டிகையை எதிர்பார்த்துள்ளோம். பெரிய கடைகளில், ஆடி தள்ளுபடி விற்பனையால், மற்ற நாளில் கனி மார்க்கெட் விற்பனை சுமாராகவே இருக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

**வேளாண்மை குறுநாடகம்**

குஜிலியம்பாறை:இயற்கை வேளாண்மையை மக்கள் மேற்கொள்ள வலியுறுத்தி, சால் கூட்டமைப்பு சார்பில் குறு நாடகம் நடந்தது.ஆர்.கோம்பை ஊராட்சி சின்னழகு நாயக்கனுாரில், மதுரை நிகழ் நாடக மையம் மற்றும் சால் கூட்டமைப்பு சார்பில், "அங்கக கூத்து' எனும் விழிப்புணர்வு நாடகம் நடந்தது. கடலுார் நிர்வாகி எட்வின் தலைமை வகித்தார். மதுரை சால் நிறுவன இயக்குநர் ஜெயபாலமுருகன் முன்னிலை வகித்து பேசினார். சினிமா நடிகர் சண்முகராஜா, நிழல் நாடக

குழுவினர் சார்பில், அங்கக கூத்து எனும் குறு நாடகம் நடத்தப்பட்டது. இயற்கை வேளாண் முறைகள், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கப்பட்டது. விவசாயத்தில் இளைஞர்கள் ஈடுபட வேண்டும்,

**50 கறிக்கோழிப்பண்ணை அமைக்க இலக்கு**

விருதுநகர்:கோழிப்பண்ணை தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் தமிழக அரசு "கோழி வளர்ப்பு திட்டத்தினை' 2012-13 முதல் செயல்படுத்திவருகிறது. இதன்கீழ் விருதுநகர்மாவட்டத்திற்கு 2015-16ம் ஆண்டிற்கு 50 கறிக்கோழிப்பண்ணைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கு வங்கி கடனுதவி அல்லது சுயமூலதனம் மூலம் கொட்டகை அமைக்கலாம். விருப்பமுள்ளவர்களுக்கு அரசு சார்பில் 5,000 எண்ணிக்கையிலான கோழிகள் கொண்ட கொட்டகைகள் அமைப்பதற்கு 25 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

ஊராட்சியில் வசிக்கும் விவசாயிகள், தனிநபர் தொழில் முனைவோர் தேர்வு செய்யப்பட தகுதியானவர்கள். இவர்களிடம் கோழிப்பண்ணை அமைக்க போதிய நிலம் தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருத்தல் வேண்டும். கோழி வளர்ப்பில் அனுபவம் உள்ளவர்களும், புதிய கொட்டகை அமைத்து கோழிப்பண்ணை விரிவாக்கம் செய்திட ஆர்வமுள்ள விவசாயிகளும் பயன்பெறலாம். ஏற்கனவே இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்ற பயனாளிகள் இந்த நிதியாண்டில் பயன்பெற முடியாது.

தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலையின் கீழ் மூன்று நாட்களுக்கு பயிற்சியளிக்கப்படும். அவர்கள் 60 நாட்களுக்குள் கொட்டகை அமைக்க வேண்டும். தகுதி உள்ளவர்கள் கலெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளரின்

கடிதம், வங்கியில் இருந்து பெறப்பட்ட கடன் வழங்க ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கான சான்றுடன் விண்ணப்பங்களை ஜூலை 31க்குள் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என,கலெக்டர் ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

**பொள்ளாச்சி தென்னை நார் தொழில் மேம்படுத்த உதவி:மத்திய இணை அமைச்சர் உறுதி**

பொள்ளாச்சி:"பொள்ளாச்சி தென்னை நார் தொழிலை மேம்படுத்தவும், கூட்டுக்குழுமம்(cluster) அமைக்கவும் மத்திய அரசு உதவ தயார்," என மத்திய இணை அமைச்சர் கிரிராஜ் சிங் கூறினார்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி மற்றும் ஆனைமலை பகுதியில் உள்ள தென்னை நார் தொழிற்சாலைகளை மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் அமைச்சக இணை அமைச்சர் கிரிராஜ் சிங் நேற்று பார்வையிட்டார். பின், தென்னை நார் உற்பத்தியாளர்களுடன் நடந்த, கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அப்போது அவர் பேசியதாவது:ஒரு காலத்தில் தென்னை நார் மற்றும் தென்னைக்கு தாய்நாடாக கேரளா தான் கூறப்பட்டு வந்தது. தற்போது, பொள்ளாச்சி உலகிற்கே வழிகாட்டும் பகுதியாக மாறியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. பொள்ளாச்சியை போன்று, கேரளாவும் தென்னை வளர்ப்பில் கவனம் செலுத்த வேண்டும். தற்போதுள்ள நார் உற்பத்தி மதிப்பு, 1,600 கோடி ரூபாய். இது மேலும், 4,000 கோடி ரூபாய் வரை உயர வேண்டும். பொள்ளாச்சி பகுதியில் மதிப்பு கூட்டப்பட்ட பொருள் உற்பத்தி செய்யவும், ஆர்வம் காட்ட வேண்டும். மத்திய அரசு கூட்டுக்குழுமம் (கிளஸ்டர்) அமைக்க, எவ்வளவு கோடி ரூபாய் வேண்டுமென்றாலும் நிதி ஒதுக்க தயார். திட்டம் தீட்ட அதிகாரிகள்

ரெடியாக உள்ளனர். தமிழகத்தில் மேலும் குழுமங்கள் துவங்க உதவ உள்ளோம். தென்னை நார் தொழில் மேம்படுத்த, மத்திய அரசால் என்ன உதவிகள் தேவையோ அனைத்தும் செய்ய தயாராக உள்ளோம்.

இவ்வாறு, அவர் பேசினார். மத்திய கயிறு வாரிய சேர்மன் சுரேந்திரநாத் திரிபாதி, செயலாளர் குமார ராஜா, பொள்ளாச்சி மண்டல அலுவலர் பூபாலன், முன்னாள் எம்.பி., ராதாகிருஷ்ணன், தொழில் வர்த்தக சபைத்தலைவர் கோபாலகிருஷ்ணன் மற்றும் தென்னை நார் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர், உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

'மேக் இன் இந்தியா திட்டத்தில் இடம்':நிருபர்களிடம் அமைச்சர் கிரிராஜ் சிங் கூறுகையில், "பிரதமரின் 'மேக் இன் இந்தியா' திட்டத்தில், பொள்ளாச்சி முக்கிய பங்கு பெறும் என்ற நம்பிக்கை உள்ளது. மத்திய அரசு இதுவரை, எட்டு குழுமங்கள் துவங்க உத்தரவு வழங்கியுள்ளது. மேலும், குழுமம் துவங்க வேண்டுமென்றால் உதவ தயாராக உள்ளோம். தமிழக அரசு பரிந்துரை செய்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

தி இந்து

தமிழால் இணைவோம்

**பாசனநீர் மேலாண்மையில் சீர்திருத்தம் அவசியம்**

வேளாண் சாகுபடிக்குத் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த

வேண்டியதை நிர்ணயிப்பதற்கான நேரம் வந்துவிட்டது. இது தொடர்பான சீர்திருத்தத்தை இனியும் தள்ளிப்போட முடியாது. ஒவ்வொரு ஹெக்டேரிலும் அதிகபட்சம் எவ்வளவு தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும் என்பதை அந்தந்த மாநில அரசுகள் முடிவு செய்து நிர்ணயிக்க வேண்டும் என்று 'வேளாண் உற்பத்தி, கொள்முதல் விலைக்கான தேசிய ஆணையம்' பரிந்துரை செய்திருப்பதைத் தீவிர மாகச் செயல்படுத்த வேண்டும். நெல், கரும்பு சாகுபடிக்குத் தண்ணீர் அதிகம் தேவைப்படுகிறது. ஒரு கிலோ நெல் விளைய 3,000 முதல் 5,000 லிட்டர் வரையில் தண்ணீர் தேவை. வரம்பில்லாமல் தண்ணீரைச் செலவிடுவதால் சூழலியலிலும், வாழ்வாதாரங்களிலும் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தில் வாய்க் கால்கள் மூலமும் நிலத்தடி நீர் உதவிகொண்டும் அதிகபட்ச சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. அங்கு ஒரு கிலோ அரிசிக்கு 5,300 லிட்டர் தண்ணீர் செலவாகிறது. 1997 முதல் விவசாயத்துக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தைப் பல மாநில அரசுகள் அறிமுகப்படுத்தின. இதனால் பொது நீர்நிலைகள் மீதான அக்கறை தொலைந்து, நிலத்தடி நீர் விவசாயம் பிரதானமானது. நிலத்தடி நீர்ச் சாகுபடியால் பல மாநிலங்களில் சாகு படிப் பரப்பளவு லட்சக்கணக்கான ஹெக்டேர்களுக்கு அதிகரித்தது உண்மை. அதே வேளையில் நிலத்தடி நீர்மட்டம் வேகமாகக் கீழே சென்றது. நிலத்தடி நீரை அதிகம் கோரும் பயிர்களுக்குப் பதிலாக மாற்றுப் பயிர்களின் சாகுபடி குறித்து நாம் சிந்திக்கவில்லை. ஆக, நிலத்தடி நீராதாரம் கண் முன்னே அழிவதை யாவரும் கைகட்டி வேடிக்கை பார்த்து நிற்கிறோம். இன்னும் எவ்வளவு காலம் இப்படிப் பார்த்திருப்பது? தண்ணீர்த் தேவை குறைவாக உள்ள மாற்றுப் பயிர் சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்புப் பாசனம், பயிர்களின் வேர்களுக்கு மட்டும் நிலத்தில் பதிக்கப்படும் குழாய்கள் மூலம்

நேரடிப் பாசனம் என்று மாற்று வழிமுறைகளை நாம் கையாளும் நேரம் வந்துவிட்டது. இந்த மாற்று முறைகளை வேளாண் ஆராய்ச்சிக்கான இந்தியப் பேரவையும் அங்கீகரித்துள்ளது. இவற்றால் மட்டும் 30% அளவுக்குத் தண்ணீரைச் சேமிக்க முடியும். குஜராத்திலும் மகாராஷ்டிரத்திலும் தண்ணீரைச் சிக்கனமாகவும் பயனுள்ள வகையிலும் கையாள விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட ‘பானி பஞ்சாயத்து’ அமைப்புகள் வலுவாகச் செயல்படு கின்றன. அவை மழை நீர் சேகரிப்பு, நீர்நிலைகளைத் தூர் வாரிப் பராமரித்தல் போன்றவற்றில் அரசுக்கு உதவுகின்றன. வானம் பார்த்த பூமியில்தான் பெரும்பாலானோர் சாகுபடி செய்கின்றனர். மழை பொய்த்தால் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. நிலத்தடி நீரைக் கொண்டு தண்ணீர் பெறலாம் என்று சராசரியாக லட்சம் ரூபாய் வரை செலவிட்டு ஆழ்துளைக் கிணறு தோண்டி தண்ணீர் பெறுகின்றனர். ஓரிரு ஆண்டுகள் கழித்து நீர்மட்டம் மேலும் கீழிறங்கியவுடன் தண்ணீரின்றிப் பயிர்கள் காய்கின்றன. இதனால் தண்ணீர் செலவே அதிகமாகிறது. தோட்டப் பயிர்களுக்கு மாறுவதாக இருந்தால் கடன் உதவி, விளைச்சலைச் சந்தைப்படுத்தும் வசதி போன்றவை உறுதி செய்யப்பட வேண்டும். இப்படி ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலம்தான் விவசாயத்துக்கும் விவசாயிகளுக்கும் புத்துயிர் ஊட்ட முடியும், நிலத்தடி நீரையும் காப்பாற்ற முடியும்.

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: நீர்மட்டம் 86 அடியாக உயர்ந்தது**



மேட்டூர், ஜூலை 17– காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நேற்று 5 ஆயிரத்து 113 கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை 5 ஆயிரத்து 270 கன அடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் நேற்று 85.73 அடியாக இருந்தது. இன்று காலை நிலவரப்படி 85.97 அடியாக உயர்ந்தது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 2 அயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் திறப்பை விட தண்ணீர் வரத்து அதிகமாக உள்ளதால், நீர்மட்டம் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து வருகிறது.

**நாமகிரிபேட்டையில் 715 மஞ்சள் மூட்டைகள் ரூ.35 லட்சத்திற்கு ஏலம்: விவசாயிகள் மகிழ்ச்சி**



ராசிபுரம், ஜூலை–14

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தாலுகா, நாமகிரிபேட்டையில் உள்ள ராசிபுரம் தாலுகா கூட்டுறவு உற்பத்தியாளர் மற்றும் விற்பனை சங்கம் கிளை வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடந்து வருகின்றது. வழக்கம்போல் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் நாமகிரிபேட்டை, ஒடுவன்குறிச்சி, புதுப்பட்டி, முள்ளுகுறிச்சி, பேளுகுறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்வதற்காக கொண்டு வந்திருந்தனர்.

இந்த ஏலத்தில் மஞ்சளை ஏலம் எடுப்பதற்காக சேலம், ஈரோடு, நாமகிரிபேட்டை, ஒடுவன்குறிச்சி உள்பட பல பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்து மஞ்சளை போட்டி போட்டுக்கொண்டு ஏலம் எடுத்தனர்.

இந்த ஏலத்தில் விரலி ரகம் 500 மூட்டைகளும், உருண்டை ரகம் 200 மூட்டைகளும், பனங்காளி ரகம் 15 மூட்டைகளும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம் குறைந்த பட்சம் ஒரு குவிண்டால் 6,889–க்கும், அதிகப்பட்சமாக ரூ.9,699-க்கும், உருண்டை ரகம் ஒரு குவிண்டால் குறைந்தபட்சம் 5,689–க்கும், அதிகப்பட்சமாக ரூ.7,616–க்கும், பனங்காளி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் 6,771–க்கும், அதிகப்பட்சமாக அதிகப்பட்சமாக ரூ.10,012–க்கும் ஏலம் போனது.

இந்த ஏலத்தில் மொத்தமாக 715 மஞ்சள் மூட்டைகள் ரூ.35 லட்சத்திற்கு ஏலம் போனதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வாரம் நடந்த ஏலத்தில் மஞ்சள் அதிக அளவில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தன. அதே நேரத்தில் மஞ்சள் மூட்டை 1–க்கு சுமார் ரூ.500 வரை விலை உயர்ந்துள்ளது.

இந்த விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆடி மாதம் தொடங்குவதையொட்டி இனி மஞ்சள் விலை உயரக்கூடும் என்றும் விவசாயிகளும் அதிக அளவில் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவார்கள் என்றும் விவசாயி ஒருவர் கூறினார்.

**ஊட்டியில் 2–வது சீசனுக்கு 3 லட்சம் மலர் நாற்றுகள் நடவுப்பணி: கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்தார்**



மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டம் சுற்றுலா பயணிகளின் சொர்க்க பூமியாக திகழ்கிறது. ஊட்டியின் அழகை ரசிக்க வரும் சுற்றுலா பயணிகளின் உள்ளத்தை கொள்ளும் வகையில் மே மாதத்தில் மலர் கண்காட்சி நடைபெறும். இந்த ஆண்டு 3 நாட்கள் நடைபெற்ற மலர் கண்காட்சியை ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் கண்டு ரசிததனர். அதன் தொடர்சியாக வருகிற செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் 2–வது சீசன் நடைபெற உள்ளது. இந்த சீசனிலும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதும். சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் ஊட்டி தாவரவியல் பூங்காவில் 3 லட்சம் மலர் நாற்றுகள் நடவும் செய்யும் பணி இன்று தொடங்கியது.

கலெக்டர் சங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மலர் செடிகள் நடவுப்பணியை தொடங்கி வைத்தார். இன்று நடவு செய்யப்பட்ட இன்காமேரி கோல்டு, ஆஸ்டர், டேலியா, கேலன்டுலா உள்ளிட்ட பல்வேறு வகையான மலர்கள் பூத்துக்குலுங்கும் போது கண்கொள்ளா

காட்சியாக இருக்கும். 2–வது சீசனுக்காக சுற்றுலா பயணிகளை வரவேற்க ஊட்டி இப்போதே தயாராகி விட்டது.

தினத் தந்தி

**கடந்த ஆண்டு கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் 18,931 குவிண்டால் விதை விற்பனை**




கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் கடந்த ஆண்டு 18 ஆயிரத்து 931 குவிண்டால் விதை விற்பனையாகி உள்ளது. வேளாண்மை

பல்கலைக்கழகம்

கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துப்பயிர்கள், பருத்தி, தீவனப்பயிர்கள், காய்கறி பயிர்கள், மஞ்சள் உள்ளிட்ட பல்வேறு பயிர்விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன்படி கடந்த 2014-15-ம் ஆண்டில் 18 ஆயிரத்து 931 குவிண்டால் விதைகள் விற்பனை செய்யப்பட்டு உள்ளன. இது தொடர்பாக வேளாண் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:- விதை உற்பத்தி

வேளாண்மை பல்கலைக்கழகத்தில் கண்டறியப்படும் விதைகளின் மாதிரிகள், விதை பரிசோதனை மையத்திற்கு அனுப்பப்பட்டு, தரச்சான்று பெற்ற பிறகே விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்காக மண்டல அளவில் உற்பத்திக்கான இடங்கள் கண்டறியப்பட்டு, விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதேபோல் தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டும் விதை உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் விதையானது, இருப்பின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வேளாண் ஆராய்ச்சி மற்றும் விதை நிலையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

**18,931 குவிண்டால் விதை விற்பனை**

வேளாண்மை பல்கலைக்கழகத்தில் விதை விற்பனை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. இதன்படி கடந்த 2009-10-ம் ஆண்டில் 9 ஆயிரத்து 715 குவிண்டால் விதையும், 2010-11-ம் ஆண்டில் 9,950 குவிண்டால் விதையும், 2011-12-ம் ஆண்டில் 10 ஆயிரத்து 653 குவிண்டால் விதையும், 2012-13-ம் ஆண்டில் 11 ஆயிரத்து 762 குவிண்டால் விதையும், 2013-14-ம் ஆண்டில் 15 ஆயிரத்து 339

குவிண்டால் விதையும், 2014-15-ம் ஆண்டில் 18 ஆயிரத்து 931 குவிண்டால் விதையும் விற்பனையாகி உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**சத்தி, பூதப்பாடியில் ரூ.3 கோடிக்கு பருத்தி ஏலம்**



ஈரோடு

சத்தி, பூதப்பாடியில் ரூ.3 கோடிக்கு பருத்தி ஏலம் போனது.

<u>சத்தியமங்கலம்</u>

சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு புளியம்பட்டி, நல்லூர், செண்பகபுதூர், மேட்டூர் மற்றும் அரியப்பம்பாளையம், வாய்க்கால்மேடு, தங்கநகர், சத்தியமங்கலம், மாக்கினாங்கோம்பை, கொடிவேரி, அரசூர், எரங்காட்டூர், பவானிசாகர் உள்பட 50–க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் 8 ஆயிரத்து 308 மூட்டைகளில் பருத்தியை கொண்டு வந்திருந்தனர். இதில் பருத்தி குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 3 ஆயிரத்து 919 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 300 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.1 கோடியே 11 லட்சத்துக்கு ஏலம் போனது. கோவை, அவினாசி, திருப்பூர், புளியம்பட்டி, சத்தியமங்கலம் ஆகிய பகுதியில் இருந்து வியாபாரிகள் போட்டி போட்டு பருத்தியை ஏலம் எடுத்துச்சென்றனர்.

<u>பூதப்பாடி</u>

இதேபோல் அம்மாபேட்டை அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று முன்தினம் தொடங்கி பருத்தி ஏலம் நேற்று வரை நடந்தது. இந்த ஏலத்துக்கு சேலம் மாவட்டம் கொங்கணாபுரம், எடப்பாடி, கொளத்தூர், சேவூர் மற்றும் அந்தியூர், பவானி, மைலம்பாடி, அம்மாபேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த 1,300–க்கும் மேற்பட்ட விவசாயிகள் பருத்தியை கொண்டு வந்தனர்.

மொத்தம் 11 ஆயிரத்து 500 மூட்டைகளில் பருத்தி கொண்டு வரப்பட்டு இருந்தது. ஏலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுரேஷ் (பொறுப்பு) முன்னிலையில் நடந்தது. சுரபி ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.4 ஆயிரத்து 700–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 500–க்கும் ஏலம் போனது. பி.டி. ரக பருத்தி குறைந்தபட்ச விலையாக குவிண்டால் ரூ.4 ஆயிரத்துக்கும், அதிகபட்ச விலையாக ரூ.4 ஆயிரத்து 400–க்கும் ஏலம் போனது. மொத்தம் பருத்தி ரூ.1 கோடியே 84 லட்சத்துக்கு விற்பனை ஆனது.

அரூர், ஊத்தங்கரை, தர்மபுரி, சேலம், அன்னூர், கொங்கணாபுரம், கோவை, புளியம்பட்டி, சத்தி, பெருந்துறை மற்றும் அம்மாபேட்டை ஆகிய பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் பருத்தியை போட்டி போட்டு ஏலம் எடுத்துச் சென்றனர்.

## 67 ஊராட்சிகளில் விலையில்லா ஆடுகள் வழங்கப்படும் கலெக்டர் ராஜேஷ் தகவல்



பயிற்சி கூட்டம் கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடைபெற்றபோது எடுத்த படம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் 67 ஊராட்சிகளில் விலையில்லா ஆடுகளும், 5 ஊராட்சிகளில் கறவை பசுக்களும் வழங்கப்படும் என்று கலெக்டர் ராஜேஷ் கூறினார்.

பயிற்சி கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழக முதல்-அமைச்சரின் சிறப்புத் திட்டமான விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. அதன்படி கடந்த 4 ஆண்டுகளில் 28 ஊராட்சிளில் 1,400 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 90 லட்சம் மதிப்பில் விலையில்லா கறவைப் பசுக்களும், 266 ஊராட்சிகளில் 19 ஆயிரத்து 795 பயனாளிகளுக்கு ரூ.25 கோடியே 34 லட்சம் மதிப்பில் விலையில்லா ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில் (2015-16) மாவட்டத்தில் 67 ஊராட்சிகளில் 5,275 பயனாளிகளுக்கு ரூ.6 கோடியே 80 லட்சம் செலவில் ஆடுகளும் மற்றும் 5 ஊராட்சிகளில் 250 பயனாளிகளுக்கு ரூ.87 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் கறவைப் பசுக்களும் வழங்கப்பட உள்ளது. இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக பயனாளிகள் தேர்வுக்குழு பயிற்சிக் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் 2

நாட்கள் நடைபெற்றது. இதற்கு கலெக்டர் ராஜேஷ் தலைமை தாங்கினார். பயிற்சிக்குழுக் கூட்டத்தில் ஊராட்சி தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் உள்ளிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பயனாளிகள் தேர்வு

கூட்டத்தில் பேசிய கலெக்டர் ராஜேஷ், பயனாளிகள் தேர்வு விதிமுறைப்படி நடைபெற வேண்டும் எனவும் தகுதியுள்ள பயனாளிகளை மட்டும் தேர்வு செய்ய வேண்டும் எனவும் தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார். பயனாளிகள் தேர்வு எந்தவிதமான புகாருக்கும் இடமளிக்காமல் பாரபட்சமின்றி தேர்வு நடைபெற வேண்டும் எனவும் வலியுறுத்தினார். மேலும் பயனாளிகளுக்கு தரமான இனவிருத்தி திறன் உள்ள ஆடுகளையும், நல்ல கறவை உள்ள உயர்ரக கறவைப்பசுக்களையும் கொள்முதல் செய்து வழங்க வேண்டும் எனவும் கலெக்டர் ராஜேஷ் அறிவுறுத்தினார். இந்த பயிற்சிக்குழுக் கூட்டத்திற்கு வந்த அனைவரையும் டாக்டர் மணிமாறன் வரவேற்றார். இதில் உதவி இயக்குனர்கள் வேடியப்பன், வில்வம், துணை இயக்குனர் ராமலிங்கம், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் தேவராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளின் ஒரு அங்குல நிலத்தைக் கூட கையகப்படுத்த விடமாட்டோம் ராகுல் காந்தி உறுதி**

ஹனுமன்கார் விவசாயிகளின் ஒரு அங்குல நிலத்தை கூட கையகப்படுத்த விடமாட்டோம் என்று ராகுல் காந்தி கூறினார்.

நடைபயணம்

காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி மராட்டியம், சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களில் நடைபயணம் மேற்கொண்டு விவசாயிகளை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். இந்நிலையில் ராஜஸ்தான் மாநிலத்துக்கு 2 நாள் பயணமாக ராகுல் காந்தி நேற்று வந்தார்.

அவர், ஹனுமன்கார் மாவட்டத்தில் 8 கிலோ மீட்டர் தூரத்துக்கு

நடைபயணம் மேற்கொண்டு விவசாயிகளை சந்தித்து பேசினார். அப்போது ராகுல் காந்தி கூறியதாவது:-

விவசாயிகளுக்கு ஆதரவு மத்தியிலும், மாநிலத்திலும் ஆளும் பா.ஜ.க. அரசு விவசாயிகளை வஞ்சித்து வருகிறது. ராஜஸ்தான் மட்டுமல்ல, நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவாக இருக்கும் என்பதை தெரிவிக்கவே நான் இங்கு வந்துள்ளேன். நீங்கள் (விவசாயிகள்) கவலைப்பட தேவையில்லை. ஏழை மக்கள், விவசாயிகள், தொழிலாளர்களின் நலனுக்காக காங்கிரஸ் கட்சி பாடுபடும். நிலம் கையகப்படுத்த முயலும் மத்திய அரசின் முயற்சிக்கு ஒருபோதும் அனுமதி அளிக்க மாட்டோம்.

உறுதி

விவசாயிகளின் ஒரு அங்குல நிலத்தைக் கூட கையகப்படுத்த விட மாட்டோம் என உறுதி அளிக்கிறேன். காங்கிரஸ் கட்சி எப்போதும் உங்கள் பக்கம் தான் இருக்கும். ராஜஸ்தானில் ஆளும் பா.ஜ.க. அரசு விவசாயிகளுக்கு அநீதி இழைத்து வருகிறது. நிலம் கையகப்படுத்தும் மசோதா நிறைவேற்றப்பட்டால் எதிர்காலத்தில் உங்கள் சந்ததிகளிடம் இருந்து நிலத்தை பறிக்கும் அபாயம் உள்ளது. ஆனால் இதற்கு காங்கிரஸ் கட்சி இடம் கொடுக்காமல் சுவர் போல் நின்று விவசாயிகளை பாதுகாக்கும்.

பிரதமர் மவுனம்

பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்றதும், “நான் ஊழலுக்கு ஒருபோதும் துணைபோக மாட்டேன். அதே போல ஊழல் செய்ய ஒருவரையும் விட மாட்டேன்“ என்று கூறினார். ஆனால் மத்திய பிரதேச மாநிலத்தில் நடந்த ‘வியாபம்‘ ஊழல் குறித்து நரேந்திர மோடி மவுனம் காப்பது ஏன்? என்று தெரியவில்லை.

ஐ.பி.எல் மோசடி வழக்கில் சிக்கி உள்ள ‘மினி மோடி‘ என்று அழைக்கப்படும் லலித் மோடியுடன், ராஜஸ்தான் மாநில முதல்-மந்திரி வசுந்தரா ராஜேவுக்கு உள்ள தொடர்பு குறித்தும் சர்ச்சை நிலவுகிறது.

நரேந்திர மோடியும், வசுந்தரா ராஜேவும் இந்த பிரச்சினைகளை மூடி மறைக்கவே பார்க்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2–வது சீசனுக்கு மலர் செடிகள் நடவு செய்யும் பணி தொடக்கம்**



ஊட்டி

2–வது சீசனை முன்னிட்டு ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் செடிகள் நடவு செய்யும் பணியினை கலெக்டர் சங்கர் நேற்று தொடங்கி வைத்தார். 2–வது சீசன் நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் கோடை சீசனும், செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் 2–வது சீசனும் நிலவுகிறது. இந்த 2–வது சீசன் காலத்தில் வட மாநிலங்களில் திருமணங்கள் அதிகளவு நடைபெறும். எனவே இந்த சீசனிற்கு பெரும்பாலும் வட மாநிலங்களை சேர்ந்த புதுமண தம்பதிகள் அதிகளவு வருவார்கள். இதனால் இந்த சீசனுக்கு தேனிலவு சீசன் என்ற பெயரும் உண்டு. 2–வது சீசனிக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் நேற்று மலர் செடிகள் நடவு செய்யும் பணி தொடங்கப்பட்டது. இந்த பணியை மாவட்ட

கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்தார். இதற்கான நிகழ்ச்சியில் தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் மணி, பூங்கா உதவி இயக்குனர் உமாராணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

2½ லட்சம் மலர்செடிகள் நடவு

இது குறித்து கலெக்டர் சங்கர் கூறியதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் வருகிற செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் 2–வது சீசன் நடைபெற உள்ளது. இதைமுன்னிட்டு ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் இன்கா மேரி கோல்டு, பிரெஞ்ச் மேரி கோல்டு, ஆஸ்டர், வெர்பினா, லூபின், கேன்டிடப்பட், காஸ்மாஸ், கூபியா, பாப்பி, லைனேரியா, மைமுலஸ், சைனாகிளாசம், அஜிரேட்டம், கிரைசாந்தமம், கேலண்டுலா, ஹெலிக்கைசம், சப்னேரியா, பெட்டுனியா உள்பட 70 ரகங்களை சேர்ந்த சுமார் 2½ லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்படும் பணி இன்று (நேற்று) தொடங்கப்பட்டு உள்ளது.

இந்த செடிகள் செப்டம்பர் மாதம் பூக்கும் வகையில் தொடர்ந்து நடவு செய்யப்படும். இதுதவிர 6 ஆயிரத்து 500 பூந்தொட்டிகளில் மலர்செடிகள் நடவு செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது. தொட்டிகளில் பூக்கள் பூத்தவுடன் பூங்காவில் உள்ள மலர் மாடத்தில் சுற்றுலா பயணிகள் பார்வைக்காக அழகாக அடுக்கி வைக்கப்படும். இந்த 2–வது சீசன் காலங்களில் 3 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**சேலம் கடைவீதியில் தேங்காய் சுடும் அழிஞ்சி மரக்குச்சி விற்பனை மும்முரம்**



ஆடி 1-ந் தேதி இன்று பிறப்பதையொட்டி சேலம் கடைவீதியில் தேங்காய் சுடும் அழிஞ்சி மரக்குச்சி விற்பனை மும்முரமாக நடந்தது. தேங்காய் சுடும் பண்டிகை ஆடி மாதம் பிறந்தாலே சேலத்தில் அம்மன் கோவில்களில் விழாக்கள் களை கட்டும். அதேசமயம் ஆடி 1-ம் தேதியன்று சேலத்தில் தேங்காய் சுடும் பண்டிகை பிரசித்தி பெற்றது. இந்த பண்டிகையில் பெரியதாக உள்ள தேங்காயில் ஒரு கண்ணில் துளையிட்டு, அதில் இருந்து தண்ணீரை வெளியில் எடுத்து, பின்னர் அந்த தேங்காயில் எள், நாட்டுசர்க்கரை, அரிசி, பொட்டுக்கடலை, தேங்காய் தண்ணீர் உள்ளிட்டவைகளை நிரப்பி அழிஞ்சி மரக்குச்சியை சொருகி, பின்னர் ஆங்காங்கே நெருப்பு மூட்டி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கூட்டம், கூட்டமாக தேங்காய் சுடுவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். பின்னர், சுட்ட தேங்காயை விநாயகருக்கு படையலிட்டு வீட்டில் உள்ளவர்கள், உறவினர்களுக்கு பகிர்ந்து கொடுத்து சாப்பிடுவார்கள். பொதுமக்கள் ஆர்வம்

அந்தவகையில் நடப்பாண்டு ஆடி 1-ந் தேதி இன்று (வெள்ளிக்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி சேலம் கடைவீதியில் நேற்று தேங்காய் சுடும் அழிஞ்சி மரக்குச்சி விற்பனை மும்முரமாக நடந்தது. பட்டைகோவில், அம்மாபேட்டை, ஆனந்தா காய்கறி மார்க்கெட், குகை, தாதகாப்பட்டிகேட், அஸ்தம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் தேங்காய் சுடும் அழிஞ்சி மரக்குச்சியை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி சென்றதை காணமுடிந்தது. ஒரு குச்சி ரூ.8 முதல் ரூ.10 வரைக்கு விற்பனை செய்யப்பட்டது. மேலும், தேங்காய்க்குள் வைக்கப்படும் பொருட்களையும் கடைகளில் பொதுமக்கள் வாங்கி சென்றனர். இது குறித்து வியாபாரிகள் சிலர் கூறுகையில், ஒவ்வொரு ஆண்டும் ஆடி 1-ம் தேதியையொட்டி ஒரு வாரத்திற்கு முன்பு அழிஞ்சி மரக்குச்சியை செதுக்கி, அதில் மஞ்சள் பூசி தயார் நிலையில் வைத்து இருப்போம். ஒரு குச்சி ரூ.8 முதல் ரூ.10 வரை விற்பனை செய்கிறோம், என்றனர்.

தினகரன்

**மக்காச்சோளம் குவின்டால் ரூ.1,500 ஆக உயர்வு**

கோவை, : மக்காச்சோளம் விலை நீண்ட நாட்களுக்கு பிறகு நேற்று உடுமலையில் குவின்டாலுக்கு ரூ.50 உயர்ந்து ரூ.1,500க்கு விற்றது. கோவை, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் வேளாண் விளைபொருட்களின் நேற்றைய (15ம் தேதி) விலை விபரம் வருமாறு: மஞ்சள் ஒரு குவின்டால் கோவையில் தனி விரலி மஞ்சள் ரூ.6,869 முதல் ரூ.7,129 வரை, தனி கிழங்கு மஞ்சள் ரூ.6,433 முதல் ரூ.6,751 வரை. தேங்காய் (100 காய்) உடுமலையில்

ரூ.1,250 முதல் ரூ.2.200 வரை, காரமடையில் ரூ.1,800 முதல் ரூ.1,900 வரை, செஞ்சேரியில் ரூ.1,250 முதல் ரூ.1,400 வரை, நெகமத்தில் ரூ.1,450 முதல் ரூ.1,550 வரை, சூலூரில் ரூ.1,350 முதல் ரூ.1,450 வரை. கிணத்துக்கடவில் ரூ.1,200 முதல் ரூ.1,400 வரை, அன்னூரில் ரூ.1,200 முதல் ரூ.1,400 வரை, பொள்ளாச்சியில் ரூ.900 முதல் ரூ.1,280 வரை. திருப்பூரில் ரூ.1,300 முதல் ரூ.1,500 வரை, ஆனைமலையில் ரூ.640 முதல் ரூ.1,430 வரை, அவிநாசியில் ரூ.1,360 முதல் ரூ.1,460 வரை.

மக்காச்சோளம் (ஒரு குவின்டால்) உடுமலையில் ரூ.1,400 முதல் ரூ.1,500 வரை, பொங்கலூரில் ரூ.1,300 முதல் ரூ.1,450 வரை, நிலக்கடலை சேவூரில் ரூ.5,530 முதல் ரூ.5,710 வரை, கொண்டைக்கடலை உடுமலையில் ரூ.4,800 முதல் ரூ.5,200 வரை, சோளம் திருப்பூரில் ரூ.2,200 முதல் ரூ.2,400 வரை, கம்பு திருப்பூரில் ரூ.1,200 முதல் ரூ.1,400 வரை, ராகி திருப்பூரில் ரூ.1,500 முதல் ரூ.1,700 வரை விலை நிலவியது.இதில் மக்காச்சோளம் விலை நீண்ட நாட்களுக்கு பிறகு உடுமலையில் குவின்டாலுக்கு ரூ.50 உயர்ந்து ரூ.1,500க்கு விற்றது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கோவை ஏல மையத்தில் ரூ.2.06 கோடிக்கு தேயிலை விற்பனைகோவை, : கோவை ஏல மையத்தில் நேற்று நடந்த ஏலத்தில் ரூ.2.06 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனையானது. இது கடந்த வாரத்தை காட்டிலும் ரூ.49 லட்சம் விற்பனை குறைவாகும்.கோவை தேயிலை ஏல மையத்தில் புதன்கிழமை மாலை தோறும் ஏலம் நடக்கிறது. அதன்படி நேற்று நடந்த ஏலத்தில் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 3.13 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 1.96 லட்சம் கிலோ விற்பனையானது. 120 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.75.98. விற்பனை மதிப்பு ரூ.1.49 கோடி. ஏற்றுமதி ரகம் (லீப்) 1.55 லட்சம்

கிலோ விற்பனைக்கு வந்தது. 83 ஆயிரம் கிலோ விற்பனையானது. 82 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.68.84. விற்பனை மதிப்பு ரூ.57 லட்சம். கடந்த வார விற்பனையோடு ஒப்பிடுகையில், உள்ளூர் ரகம் கிலோவுக்கு 59 பைசா அதிகரித்துள்ளது. ஏற்றுமதி ரகம் கிலோவுக்கு ரூ.2.55 குறைந்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் ரூ.2.06 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரத்தை காட்டிலும் ரூ.49 லட்சம் குறைவாகும்.

**முன்னறிவிப்பு தேவை**

பாசன வசதிக்காக அணைகள் திறக்கப்படுவது வழக்கமான விஷயம்தான். ஆனால், தமிழக அரசின் நடவடிக்கையில் மிகப்பெரிய தவறு இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதாவது, அணைகள் திறக்கப்படுவது குறித்து முன்கூட்டியே அறிவிப்பு வெளியிட வேண்டும்; அதன்பின்னரே அணைகள் திறக்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கை. ஆனால், தமிழக அரசு சார்பில் வெளியிடப்படும், நீர்திறப்பு குறித்து அனைத்து அறிவிப்புகளும், நாளைக்கு திறக்கப்படப்போவது, இன்றைக்குத்தான் அறிவிக்கப்படுகிறது. கடைசியாக வெளியிடப்பட்ட வைகை, அமராவதி அணை திறப்பு உள்பட அனைத்து அறிவிப்புகளுமே, இந்த வரிசையில்தான் உள்ளது. இதுபோன்று முன்யோசனையற்ற செயலால் விவசாயிகளுக்கு உரிய பலன் இல்லாமல் போகிறது என்பதுதான் வருத்தமான விஷயம். அதாவது விழலுக்கு செல்லும் நீராக, அணை நீர் வீணாகிறது. அணை திறக்கப்படுவது குறித்து முன்கூட்டியே தெரிவித்தால், வாய்க்கால்களை சரி செய்வது, மண்ணை சமப்படுத்துவது, விதைப்புக்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது, அதற்கான பொருட்களை வாங்கி வைப்பது போன்ற பணிகளை செய்து கொள்ள முடியும். விவசாயிகள் அனைவருமே பணக்காரர்கள் அல்ல. பெரும்பாலானவர்கள் கடன் வாங்கி விவசாயப் பணிகளை

மேற்கொள்பவர்கள். அதுபோன்றவர்களுக்கு முன்கூட்டியே தண்ணீர் திறப்பு குறித்து தகவல் தெரிவித்தால்தான், அதற்கு முழு அளவில் தயாராக முடியும். இதுபோன்ற முன்னறிவிப்பால் விவசாயமும் அதிகரிக்கும் என்பது மறைமுகமான ஒரு விஷயம். ஆனால், உரம், வாடகை டிராக்டர், கூலி ஆட்கள் என்று அனைத்து விஷயங்களுமே இப்போது தட்டுப்பாடாக இருக்கும் நிலையில், உடனடி தண்ணீர் திறப்பு போன்று, விவசாயிகளால் உடனடி தயார் நிலைக்கு வர முடியுமா? அணைகள் திறப்பது குறித்து குறைந்தபட்சம் 15 நாட்களுக்கு முன்னதாக அறிவிப்பு வெளியிட வேண்டும். நீர் திறப்புக்கு முன்னதாக சம்பந்தப்பட்ட பகுதிகளில் தேவையான உரம், இடுபொருட்கள், விதைகள், மருந்துகள் போன்றவை தட்டுப்பாடு இல்லாமல் உள்ளதா என்பதையும் அரசு ஆராய வேண்டும். இந்த முன்னேற்பாடுகளை எல்லாம் செய்தபின்னரே தண்ணீர் திறக்கப்பட வேண்டும். தண்ணீர் என்பது மிக உன்னதமான விஷயம் என்பதை பஞ்சம் ஏற்படும்போதுதான் அறிய முடியும். அந்த இயற்கை கொடையை, தேவையின்றி வீணாக்காமல், உரியவர்களுக்கு சென்று சேரவேண்டும் என்பதை நினைத்து செயல்பட்டால் விவசாயிகள் மட்டுமல்ல, நாடும் செழிக்கும்

**நிலத்தடி நீர் மட்டம் குறைவதை தடுக்க பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**

வலங்கைமான், : டெல்டா மாவட்டங்களில் வேகமாக குறைந்து வரும் நிலத்தடி நீர் மட்டத்தை காத்திட கர்நாடகாவிடமிருந்து தண்ணீரை தமிழக அரசு கேட்டு பெற்று பாசனத்திற்கு திறந்து விட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.டெல்டா மாவட்டங்களில் ஏப்ரல் மற்றும் மே, ஜூன் மாதங்களில் அவ்வப்போது லேசான மழை பெய்து வந்தது. இதனால் புஞ்சையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள

தென்னை, வாழை, மூங்கில் உள்ளிட்டவைகளுக்கு நல்ல பலன் கிடைத்தது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக டெல்டா மாவட்டங்களில் மழை பெய்யவில்லை. தற்போது வெப்பம் அதிகமாக இருப்பதால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 3 அடி அளவுக்கு நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. நிலத்தடி நீர் மட்டத்தினை காத்திட மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்ட முயற்சிகள் உரிய பலனை அளிக்கவில்லை.

இதனால் கைப்பம்புகள் மற்றும் வீடுகளில் பயன்படுத்தபடும் சிறு மோட்டார்கள் ஆகியவைகளில் தண்ணீர் வரவில்லை. மேலும் தற்போது நிலவி வரும் வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்கு போதிய மேய்ச்சலும் இல்லை. வழக்கமாக மேட்டூர் அணை ஜீன் 12ம் தேதி திறக்கப்படும்போது அந்த மாத இறுதிக்குள் தண்ணீர் அனைத்து ஆறுகளிலும் செல்லும். இதன் மூலம் ஆறுகளில் தண்ணீர் வந்த சில தினங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். மேட்டூர் அணை திறப்பது காலதாமதம் ஆவதால் டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீரின் நிலை கேள்விக்குறியாக உள்ளது. ஆறுகளில் கடந்த 6 மாதங்களாக தண்ணீர் இல்லாததால் நீர்மட்டம் குறைந்து வருகிறது.எனவே பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது ஒருபுறம் இருக்க, நிலத்தடி நீர்மட்டத்தை காத்திட காலதாமதமின்றி கர்நாடகாவிடமிருந்து தமிழக அரசு தண்ணீர் கேட்டுப்பெற வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கரூர் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறையால் மஞ்சள் சாகுபடி குறைவு**

கரூர். : தண்ணீர் பற்றாக்குறையால் கரூர் அமராவதி பாசன பகுதியில் மஞ்சள் சாகுபடி குறைந்து விட்டது.

கரூர் தாலுகாவில் அமராவதி பாசன பகுதிகளான பெரிய

ஆண்டாங்கோயில், மொச்சக்கொட்டாம்பாளையம், கோவிந்தம்பாளையம், செட்டிபாளையம், அப்பிபாளையம், கருப்பம்பாளையம், ஆண்டாங்கோயில் புதூர், பெரியஆண்டாங்கோயில். விசுவநாதபுரி பகுதியில் 20ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்பட்டது. ஊடுபயிராக உளுந்து சாகுபடி செய்யப்பட்டது. மஞ்சள் பயிருக்கு தண்ணீர் போதுமான அளவுக்கு வரவேண்டும். நடவுக்கு முன்பும் பின்பும் மஞ்சள் பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்பு மண்ணின் தன்மைக்கேற்ப வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டியதிருக்கிறது. கடந்த இரு ஆண்டாக கரூர் மாவட்ட ஆயக்கட்டு பகுதிக்கு கிடைக்கவேண்டிய அமராவதி நீர் முறையாக கிடைக்கவில்லை. மழையும் பெய்யவில்லை. இதனால் சாகுபடி பரப்பும் குறைந்து விட்டது. கிணற்று பாசனம் மூலம் குறைந்த அளவே மஞ்சள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## முளைப்பு திறன் குறைந்தால் நெற்பயிர் மகசூல் பாதிக்கும் வேளாண் அலுவலர் ஆலோசனை

கரூர்,: முளைப்பு திறன் குறைந்தால் பயிர் மகசூல் பாதிக்கும் என வேளாண் அலுவலர் தெரிவித்துள்ளார். கரூர் காந்திகிராமம் விதைப் பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண்மை அலுவலர் தாகூர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதை, தரமான விதைகளை விதைப்பதன் மூலமே அதிக மகசூல் பெற முடியும். தரமான விதை என்பது விதைச்சான்று துறையினரால் பல கட்டங்களில் வயல்மட்ட ஆய்வு மற்றும் விதைப்பரிசோதனை செய்யப்பட்ட சான்று விதைகளே ஆகும். விதைப் பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன், பிறரக கலப்பு என 4 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புறத்தூய்மை என்பது விதையின் சுத்தத்தை குறிப்பதாகும். அதில், களை விதைகள், பிற பயிர் விதைகள், உயிர்ப்பற்ற பொருள் ஆகியவை பரிசோதிக்கப்படுகிறது. ஈரப்பதம் என்பது பயிர் வாரியாக ஈரப்பதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில், நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாக இருப்பதால் அதிக பூச்சி தாக்குதல் மற்றும் நுண்ணுயிர் தாக்குதலுக்கு உட்பட்டு தரம் குறைய வாய்ப்புள்ளது. முளைப்புத்திறன் பரிசோதனையின் விதை மாதிரிகளின் முளைப்புத்திறன் பரிசோதிக்கப்படுகிறது. ஒவ்வொரு விதைக்கும் குறிப்பிட்ட முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முளைப்புத்திறன் குறைந்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கும். பிறரக கலப்பு என்பது ஒரே பயிரில் பல்வேறு ரக விதைகள் கலந்திருப்பது ஆகும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் பிறரக கலப்பு இருந்தால் விதைகள் விற்பனைக்கு பரிந்துரைக்கப்படுவதில்லை. இதன் மூலம் வேளாண்மை துறையினரால் விதைப்பண்ணை அமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும் விதைகளுக்கும், தனியார் உற்பத்தியாளர்களின் விதைகளுக்கும், விதைப்பரிசோதனை அடிப்படையிலேயே சான்று அளிக்கப்படுகிறது. இதன் மூலம் தரமான விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய பரிசோதனை முடிவுகள் பயன்படுகின்றன.

விவசாயிகள், விதை விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளின் தரத்தை அறிய பகுப்பாய்வு முடிவுகள் பயன்படுகிறது. விதைப்பரிசோதனை ஆய்வுக்கட்டணமாக பணி விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.30மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இந்த கட்டணத்தை நேரிலோ அல்லது மணிஆர்டர் மூலமாகவோ வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், இரண்டாவது குறுக்குத்தெரு, திண்ணப்பா நகர், காந்திகிராமம் கரூர்4 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.பணி விதைமாதிரிகள் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு பகுப்பாய்விற்கு அனுப்பும் போது, விதை மாதிரியின் அளவு கம்பு,

பனிவரகு, ராகி, முள்ளங்கி, கீரை விதைகள், எள் போன்ற சிறிய அளவிலான விதைகள் எனில் சுமார் 50கிராம் அளவுக்கு குறையாமலும், நெல், மக்காச்சோளம், உளுந்து, பயறு வகைகள் போன்ற பெரிய அளவிலான விதைகளாக இருந்தால் சுமார் 150 கிராமிற்கு குறையாமலும் அனுப்ப வேண்டும். விதை மாதிரிகளை துணிப்பை அல்லது பாலித்தீன் பைகளில் விதைகளை இட்டு பகுப்பாய்வு முடிவுகளுக்கு அனுப்ப வேண்டிய முகவரி, பயிர் ரகம், குறியீட்டு எண், விதை அளவு ஆகிய விவரங்கள் அடங்கிய சீட்டை இணைத்து அனுப்ப வேண்டும் என கருர் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் தாகூர் தெரிவித்துள்ளார்.

**நிரந்தர உற்பத்தி, வளர்ச்சிக்கு விதையின் தரமறிந்து விதைக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் வேளாண்மையில் நிரந்தர உற்பத்தி மற்றும் வளர்ச்சிக்கு விதையின் தரம் அறிந்து விதைக்க வேண்டும் என வேளாண் அலுவலர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இதுகுறித்து புதுக்கோட்டை விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர்கள் கண்ணன் மற்றும் நளினி விடுத்துள்ள செய்திக்குறிப்பு: வேளாண்மையின் உற்பத்திக்கு விதை அடிப்படையான இடு பொருளாகும். உழவர்களுக்கு தரமான விதைகள் கிடைக்க செய்வதற்காக தமிழ்நாடு அரசு விதைச் சான்றளிப்புத் துறையின் கீழ் விதை சான்றளிப்பு, விதை ஆய்வு, விதை பரிசோதனை மற்றும் பயிற்சி ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவற்றுள் புதுகை மாவட்ட விவசாயிகள் விதையின் தரத்தை அறிந்துகொள்ளும் வகையில், மாவட்டத்தில் 30, ராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம் புதுகை என்ற முகவரியில் விதைப் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

விதையின் தரத்தை அறிய விதைப்பரிசோதனை செய்யப்படுகிறது. இப்பரிசோதனையில் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற ரக கலப்பு கண்டறியப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. விதைச்சட்டம் 1966 மற்றும் விதைகள் கட்டுப்பாட்டு ஆணை 1983 உரிய முறையில் செயல்படுத்த விதை பரிசோதனை திட்டம் அவசியமானது. புதுகை விதை பரிசோதனை நிலையம் ஒரு அறிவிக்கப்பட்ட விதை பரிசோதனை நிலையமாக செயல்பட்டு வருகிறது. இப்பரிசோதனை நிலையத்தில் சான்று விதை, ஆய்வாளர் விதை மட்டுமல்லாமல் உழவர்களிடமிருந்தும், விற்பனையாளர்களிடமிருந்தும், விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றது. விதை பரிசோதனை முடிவுகள் தங்கள் இருப்பிடத்திற்கே அனுப்பி வைக்கப்படும்.

வருகிற ஆடிப்பட்டத்தில் காய்கறி சாகுபடி பணிகள் துவங்கப்பட உள்ளது. எனவே, புதுகை மாவட்டத்தில் உள்ள காய்கறி சாகுபடியாளர்கள் விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் தங்கள் கைவசம் உள்ள காய்கறி விதைகளை பரிசோதனை செய்து விதைப்பதன் மூலம் அதிக மகசூல் பெற முடியும். கத்திரி, மிளகாய், தக்காளி ஆகிய பயிர்களுக்கு 10 கிராம் விதையளவும், வெண்டை, கொத்தவரை, முள்ளங்கி ஆகிய பயிர்களுக்கு 100 கிராம் அளவில் ஆய்வுக்கு அனுப்ப வேண்டும். ஒவ்வொரு பயிருக்கும் தனித்தனியே துணிப்பையினுள் இட்டு சிப்பம் கட்ட வேண்டும். துணிப்பையினுள் முகவரி பயிர் மற்றும் தேவையான பரிசோதனை விபரங்களை கொண்ட விபரத்தாள் வைக்கப்பட வேண்டும். விதைப் பரிசோதனைக் கட்டணமாக ஒரு விதை மாதிரிக்கு ரூ.30 வீதம் செலுத்தி தரமறிந்து விதைக்க வேண்டும். இவ்வாறு அதில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**குழித்தட்டு முறையில் காய்கறி சாகுபடி பயிற்சி**

கொள்ளிடம், : நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே உள்ள சந்தப்படுகையில் தோட்டக்கலை பயிர் சாகுபடியாளர்களுக்கு உழவர் வயல்வெளிப்பள்ளி துவக்க விழா நடந்தது.ஆணைக்காரன்சத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் ஏஷான்பீவி தலைமை வகித்தார். கொள்ளிடம் உதவி தோட்டக்கலை அலுவலர் செல்வராஜ் வரவேற்றார். உழவர் வயல்வெளிப்பள்ளியின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் கணேசன் விளக்கினார். 6 வாரங்கள் நடைபெறும் இப்பயிற்சி வியாழக்கிழமை தோறும் நடைபெறும். முதல் நாளில் குழித்தட்டு முறையில் காய்கறி பயிர் நாற்றங்கால் அமைப்பது பற்றி செயல்விளக்கம் செய்து, அதன் பயன்கள் பற்றி நாகை தோட்டக்கலை அலுவலர் கண்ணன் விளக்கமாக எடுத்துரைத்தார். வரும் பயிற்சி நாட்களில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு, பசுமை குடில் அமைத்து காய்கறி சாகுபடி செய்தல் குறித்து விபரங்கள் தெரிவிக்கப்படும். உதவி தோட்டக்கலை அலுவலர் ஜான்கென்னடி நன்றி கூறினார்.

உழவர் பயிற்சி பள்ளிக்கான ஏற்பாடுகளை உதவிதோட்டகலை அலுவலர்கள் கல்யாணம், குமரேசன், முன்னோடி விவசாயி பன்னீர்செல்வம் ஆகியோர் செய்திருந்தனர். பயிற்சியில் காய்கறி சாகுபடி செய்யும் 25 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பாசனத்துக்கு அடுத்தமாதம் தண்ணீர் திறப்பு விதை நெல், உரம் போதுமான அளவு இருப்பு வைக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி உள்ளிட்ட பாசனங்களுக்கு அடுத்த மாதம் தண்ணீர் திறக்கப்பட உள்ளதையடுத்து விதைநெல், உரங்கள் உள்ளிட்டவைகளை வேளாண் துறையினர் முன்கூட்டியே

தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி, காலிங்கராயன், தடப்பள்ளிஅரக்கன்கோட்டை மற்றும் மேட்டூர் மேற்கு கரை உள்ளிட்ட பாசனங்கள் உள்ளன. இதில் காலிங்கராயன் வாய்க்காலில் வழக்கமாக ஜூன் 15 ம் தேதி தண்ணீர் திறப்பது வழக்கமாகும். ஆனால் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்ததால் இந்த ஆண்டு கடந்த 3ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இதே போல தடப்பள்ளி அரக்கன்கோட்டைக்கு வழக்கமாக ஏப்ரல் 15ம் தேதிதண்ணீர் திறக்க வேண்டும். ஆனால் ரூ.40 கோடி செலவில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதால் இன்னும் தண்ணீர் திறக்கப்படவில்லை. மாவட்டத்தில் பெரிய பாசனமாக விளங்கி வரும் கீழ்பவானி பாசனத்திற்கு ஆகஸ்ட் 15ம் தேதி தண்ணீர் திறக்கப்பட வேண்டும். இந்த ஆண்டு பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திருப்திகரமாக உள்ளதால் அட்டவணைப்படி தண்ணீர் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.இதே போல தடப்பள்ளி அரக்கன்கோட் டை பாசனத்திற்கும் அடுத்த மாதம் தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். மாவட்டத்தில் அனைத்து பாசனங்களுக்கும் தண்ணீர் திறந்துவிடப்படும் போது இடுபொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவது வழக்கமாகிவிட்டது. குறிப்பாக கடந்த ஆண்டு உரங்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டதால் விளைச்சல் பாதிக்கப்பட்டதாக விவசாயிகள் புகார் கூறினர். எனவே இந்த ஆண்டு முன்கூட்டியே இடுபொருட்களான விதை நெல்,உரங்கள் உள்ளிட்டவைகளை போதுமான அளவு இருப்பு வைக்க வேளாண்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். இது குறித்து விவசாயிகள் தரப்பில் கூறுகையில், கடந்த ஆண்டுகளில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்ட பிறகு கூட விதை நெல் கிடைக்காத நிலை ஏற்பட்டது. இதே போல உரங்கள் தட்டுப்பாடு அதிக அளவில் இருந்தது.

அறுவடை செய்யும் வரை உரங்களுக்கு தட்டுப்பாடு இருந்து வந்தது. உரிய காலத்தில் உரம் இடப்படாததால் போதிய விளைச்சல் கிடைக்கவில்லை. இதே போல போலி விதைகளின் விற்பனையை அதிகாரிகள் தடுக்காததால் விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்தனர். எனவே இந்த ஆண்டு முன்கூட்டியே அனைத்து இடுபொருட்களையும் இருப்பு வைக்க வேளாண்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறினர். இது குறித்து வேளாண்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, இந்த ஆண்டுக்கு தேவையான விதை நெல் போதுமான அளவு இருப்பு உள்ளது. ஏஎஸ்டி 16, ஏடீடி 38, ஆடுதுறை 39, ஐஆர் 20, வெள்ளை பொன்னி உள்பட 530 டன் விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதே போல உரங்களும் தேவையான அளவு இருப்பு உள்ளது என்றனர்.

**தாவரவியல் பூங்காவில் 2ம் சீசன் நாற்று நடவு பணி இன்று துவக்கம்**

ஊட்டி, : ஊட்டி தாவரவியல் பூங்காவில் இரண்டாம் சீசனுக்கான நாற்று நடவு பணியை இன்று துவக்க தோட்டக்கலைத்துறை திட்டமிட்டுள்ளது. ஆண்டு தோறும் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் முதல் மற்றும் இரண்டாம் சீசன் போது மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. மலர் கண்காட்சியை காண பல லட்சம் சுற்றுலா பயணிகள் வந்துச் செல்கின்றனர். இரண்டாம் சீசனின் போது, மலர் கண்காட்சி நடத்தவில்லை என்றாலும், வெளி மாநில மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இரண்டாம் சீசன் நெருங்கிய நிலையில், தாவரவியல் பூங்காவை தயார் செய்யும் பணி தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. இந்நிலையில், பூங்காவில் 2 லட்சம் மலர் நாற்று நடவு செய்ய பூங்கா நிர்வாகம் திட்டமிட்டுள்ள நிலையில், இன்று இரண்டாம் சீசனுக்கான

மலர் நாற்றுகள் நடவு செய்யும் பணிகளை துவக்க தோட்டக்கலைத்துறையினர் முடிவு செய்துள்ளனர். இதற்காக, பூங்காவில் உள்ள அனைத்து பாத்திகளும் தயார் செய்யப்பட்டுள்ளது. இன்று துவங்கும் நடவு பணிகள், மலர்கள் பூக்கும் காலத்தை பொறுத்து அந்தந்த வகை மலர் நாற்றுக்கள் நடவு செய்யப்படவுள்ளன. ஊட்டி, : ஊட்டி தாவரவியல் பூங்காவில் இரண்டாம் சீசனுக்கான நாற்று நடவு பணியை இன்று துவக்க தோட்டக்கலைத்துறை திட்டமிட்டுள்ளது. ஆண்டு தோறும் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் முதல் மற்றும் இரண்டாம் சீசன் போது மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. மலர் கண்காட்சியை காண பல லட்சம் சுற்றுலா பயணிகள் வந்துச் செல்கின்றனர். இரண்டாம் சீசனின் போது, மலர் கண்காட்சி நடத்தவில்லை என்றாலும், வெளி மாநில மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். இந்நிலையில், இரண்டாம் சீசன் நெருங்கிய நிலையில், தாவரவியல் பூங்காவை தயார் செய்யும் பணி தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. இந்நிலையில், பூங்காவில் 2 லட்சம் மலர் நாற்று நடவு செய்ய பூங்கா நிர்வாகம் திட்டமிட்டுள்ள நிலையில், இன்று இரண்டாம் சீசனுக்கான மலர் நாற்றுகள் நடவு செய்யும் பணிகளை துவக்க தோட்டக்கலைத்துறையினர் முடிவு செய்துள்ளனர். இதற்காக, பூங்காவில் உள்ள அனைத்து பாத்திகளும் தயார் செய்யப்பட்டுள்ளது. இன்று துவங்கும் நடவு பணிகள், மலர்கள் பூக்கும் காலத்தை பொறுத்து அந்தந்த வகை மலர் நாற்றுக்கள் நடவு செய்யப்படவுள்ளன.

**சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் சுட்டெரிக்கும் அடித்து வரும் நிலையில் கோடைசாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் சுட்டெரிக்கும் அடித்து வரும் நிலையில் அறிவிப்பில்லா மின்வெட்டால்

கோடைசாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதிகளான பள்ளத்தூர், ஆண்டிக்காடு, இரண்டாம்புளிக்காடு, நாடியம், குருவிக்கரம்பை, மருங்கப்பள்ளம், மரக்காவலசை, வீரியங்கோட்டை, முடச்சிக்காடு, கைவனவயல், பூக்கொல்லை, கழனிவாசல் உட்பட பல்வேறு பகுதிகளில் ஒரு போகம் சம்பா சாகுபடி மட்டுமே நடைபெறுவது வழக்கம். அதேவேளையில் கோடையில் சுமார் 100 எக்டேருக்கு மேல் கோடை சாகுபடி செய்யப்படுவதும் உண்டு. மும்முனை மின்சாரம் 10 முதல் 12 மணிநேரம் வரை வழங்கப்பட்டு வந்தது. இந்த மின்சாரத்தை நம்பி கோடை சாகுபடி செய்வோம் என்ற நம்பிக்கையில் பல்வேறு பகுதிகளில் ஒரு சில இடங்களில் கோடை சாகுபடி செய்துள்ளனர்.

ஆனால், திடீரென கடந்த 15 தினங்களுக்கு மேலாக மும்முனை மின்சாரம் எந்தவித முன் அறிவிப்பும் இல்லாமல் 3 மணி முதல் 6 மணிநேரம் கூட முழுமையாக கிடைக்கவில்லை. மேலும் வழங்கக்கூடிய மும்முனை மின்சாரமும் தொடர்ச்சியாக வழங்காமல் ஒரு மணிநேரம் இரண்டு மணிநேரம் இடைவெளிவிட்டு வழங்கப்படுகிறது. தற்சமயம் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மழையின்றி அக்னி நட்சத்திரத்தை விட அதிகமாக சுட்டெரிக்கிறது.

இதனால் கோடை சாகுபடி முழுமை பெறுமா என்பது சந்தேகமே என விவசாயிகள் கூறுகின்றனர். அதேசமயம் மார்கழி, தை மாதங்களில் தென்னைக்கு விவசாயிகள் உரம் வைப்பது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டு மார்கழி, தை மாதங்களில் உரம் வைக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு கோடையில் தண்ணீர் பாய்ச்சுவதற்கு போதுமான மின்சாரம் கிடைக்காததால் தென்னை மரங்களும் வாடி வதங்கத் தொடங்கியுள்ளது. வெயில் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறதே தவிர குறைந்தபாடில்லை. இதேநிலை நீடித்தால் தென்னை

சாகுபடி முழுமையாக பட்டுப்போய்விடும் என விவசாயிகள் கூறுகின்றனர்.

**தஞ்சையில் நாளை விவசாயிகள், வியாபாரிகள் விழிப்புணர்வு கூட்டம்**

தஞ்சை, : தஞ்சை நாஞ்சிக்கோட்டை சாலை ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் உள்ள உழவர் மையத்தில் நாளை (17ம்தேதி) விவசாயிகள், வியாபாரிகள் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற உள்ளது.நாளை காலை 10 மணிக்கு நடைபெறும் கூட்டத்திற்கு கலெக்டர் சுப்பையன் தலைமை வகிக்கிறார். ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகளை மேலும் நல்ல முறையில் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே கூட்டத்தில் விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டு பயன்பெற தஞ்சாவூர் வேளாண் வணிக துணை இயக்குனர் கலியராஜ், தஞ்சாவூர் விற்பனைக் குழு செயலாளர் ரவி ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.